Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (12 6-66) இதழ் 125

பராபவ வைகாசி 30 ஸபர் 13 ஞாயிற்றுக்கிழமை

மில்க் வைற்
நீல சோப்
புதிய இரசாயனம்
சேர்க்கப்பட்டு
புதிய மேலுறையுடனும்
விற்பனையாகின்றது

## ரூ. 2,30,000 பெறுமதி தங்கம் கடத்தல்

டாக்கா, ஜூன் 11

கிழக்குப் பாகிஸ்தானுக்குச் சட்ட விரோதமாகக் கடத்த முயன்ற 2.30,000 ரூபாய் பெறுமதியுள்ள தங்கத்தை சுங்கப் பகுதியினர் கைப்பற்றியுள்ளனர். இது சம்பந்தமாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

(பி. டி. ஸி.)

# கொலை வழக்கு சம்பந்தமான முக்கிய பதிவுப்புத்தகம்

## பொலிஸ் நிலையத்திலிருந்து மாயமாக மறைந்த மர்மம்

### விசாரணை நடத்த நீதியரசர் உத்தரவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

உடுவில் கொலைவழக்கு சம்பந்தப்பட்ட தகவல் பதியும் புத்தகம், சுன்னாகம் பொலிஸ் நிலையத்திலிருந்து எட்டு மாதத்திற்குமுன் மாயமாக மறைந்து விட்டது. இது பற்றி நேற்றுக்காலை வட பகுதி அசைஸ் நீதிமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

நீதிமன்றம் ஆரம்பமானதும் மேற்கண்ட தகவலை நீதியரசர் டாக்டர் ஏச். டப்ள்யு தம்பையா கியூ. ஸி.யின் கவனத்திற்கு, முடிக்குரியவழக்கறிஞர் திரு. ஜி. பி. எஸ். டி, சில்வா கொண்டுவந்தார்.

இச்சந்தர்ப்பத்தில் எதிரி சார்பில் ஆஜரானவழக்கறிஞர் ஜி. ஜி. பொன்னம்பலம் பொலிஸ் நிலையத்திலிருந்து இவ்வழக்கு சம்பந்தப்பட்ட இரு புத்தகங்கள் போனதாகவும், அவற்றில் ஒன்று ஆச்சரியமான முறையில், திரும்பவும் பொலிஸ் நிலையத்தில் புகுந்துவிட்டதாகவும் குறிப்பிட்டார்.

இவ்வழக்கில் உடுவிலைச் சேர்ந்த இரத்தினம் குமாரதாசன் சிவகுரு இராசலிங்கத்தை கடந்தவருடம் பெப்ரவரி மாதம் பொல்லால் அடித்துக் கொலைசெய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தகவல் பதிவுப் புத்தகங்கள் மாயமாகமறைந்த விஷயம் தெரிவிக்கப்பட்டதும், நீதியரசர் சப்இன்ஸ்பெக்டர் இராசநாயகத்தைக் கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

மாயமாய்மறைந்த தகவல் புத்தகத்தில், முக்கியசாட்சியின் முதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டிருப்பதாக முடிக்குரிய வழக்கறிஞர் தெரிவித்தார்.

நீதியரசர்: தகவல்பதிவுப் புத்தகம் எங்கே?

சப்இன்ஸ்பெக்டர்: காணவில்லை.

நீதியரசர்: இவ்விஷயமாக விசாரணை நடத்தவேண்டும். இவ்வழக்கு சம்பந்தப்பட்ட மற்ற புத்தகங்களை கோர்ட்டின் பாதுகாப்பில வைத்திருக்கவேண்டும், இப்படியான முக்கிய புத்தகங்கள் பொலிஸ் நிலையத்திலிருந்து காணாமல் போவதால், விசாரணைக்கு இடைஞ்சல் ஏற்படுகிறது. இப்புத்தகங்கள் இல்லாது எப்படிநீதி செலுத்த முடியும்.

நீதியரசர் மேலும் குறிப்பிட்டதாவது:—

அவமானம்! அவமானம்!! சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு இதுஒரு பெரும் அவமானம். கடந்த பருவகால விசாரணையின்போது ஒரு சப் இன்ஸ்பெக்டர், முழுக்க முழுக்கப் பொய் சொல்லியதால், அவரை நான்முறைப்பாடு செய்யவேண்டியிருந்தது. இந்த பருவகால விசாரணையில் இப்புத்தகங்கள் காணாமற்போயிருக்கின்றன. இதுபெரியகேவலமான விஷயம். இவ்விஷயத்தைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு உடன் அறிவித்து, இதையிட்டு ஒருவிசாரணை நடத்தி, அதன் அறிக்கையை ஒரு மாதகாலத்திற்குமுன் கோர்ட்டில் சமர்ப்பிக்கும்படி கட்டளையிடுகிறேன்.

அந்த விசாரணையில் குற்றவாளியாகக்காணப்பட்டவர்கள் சுப்ரீம்கோர்ட்டை அவமதித்த குற்றத்திற்காக மூன்று நீதியரசர்கள்முன்னிலையில் விசாரணைசெய்யப் படுவார்களென்றும் நீதியரசர் கூறினார்.


ஜி. ஜி: இப்புத்தகம் காணவில்லையென முதலில் எப்போது தெரியும்?

சப்இன்ஸ்பெக்டர்: ஏழு எட்டு மாதத்திற்குமுன் இத்புத்தகம் இன்ஸ்பெக்டர்

(8-ம் பக்கம் பார்க்க)

பாத்திரங்கள் வாங்கும் பொழுது
டொலர் மார்க் என்றே கேளுங்கள்

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14. டாம் வீதி கொழும்பு

உற்பத்தியாளர்கள்:
அலுமினிய தொழிற்சாலை
மாவிட்டபுரம்.

# அணு ஆயுதங்களை இந்தியா தயாரிக்கப் போகிறதாம்

## பாக். மந்திரி புகார்

ராவல்பிண்டி, ஜூன் 11

இந்தியா அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் திட்டத்தில் இறங்கியிருப்பதாக பாகிஸ்தான் வெளிவிவகார உதவி மந்திரி திரு. அப்துல் அவால் புயன் குற்றம் சுமத்தியுள்ளார்.

அணுசக்தி ஆராய்ச்சித் துறையில் கனடா வழங்கியிருக்கும் உதவிகளைப் பயன்படுத்தி அணு ஆயுதங்களைத் தயாரிக்க இந்தியா எண்ணங் கொண்டிருப்பதாக இவர் குறைகூறியுள்ளார்.

இங்கு ஆரம்பமான தேசிய சட்டசபைக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில்தான் திரு. அப்துல் அவால் மேற்கண்ட குற்றச்சாட்டுக்களை வெளியிட்டார்.

அணு ஆயுத உற்பத்தித் துறையில் இந்தியா இறங்குமானால், ஆபிரிக்க ஆசிய நாடுகள் அனைத்துக்குமே பெரிய ஆபத்து ஏற்பட்டுவிடும் என்று இவர் எச்சரித்துள்ளார்.

(பி. டி. ஸி.)

## 93-வது இலங்கை சுவீப் முடிவுகள்

கொழும்பு, சனி

கடந்த வியாழக்கிழமை இங்கு இழுக்கப்பட்ட 93-வது இலக்க தேசிய லொத்தர் சுவீப்பில் முதல் மூன்று பரிசுகள் பெறும் அதிர்ஷ்ட டிக்கட்டுகள் வருமாறு:

முதற்பரிசு
08 L 0805 ரூபா 32,500

இரண்டாவது பரிசு
02 T 0178 ரூபா 13,000

மூன்றாம்பரிசு
02 M 0355 ரூபா 3,250

(8-ம் பக்கம் பார்க்க)

## சூ ருமேனியா செல்வார்

பீகிங், ஜூன் 11

சீனப் பிரதமர் திரு சூ-என்-லாய் இம்மாத இறுதியில் ருமேனியாவுக்கு விஜயம் செய்வார்.

ருமேனிய கம்யூனிஸ்ட் கட்சியினதும் அரசாங்கத்தினதும் அழைப்பின் மீது இவர் அங்கு செல்கிறார்

(பி. டி. ஸி)

## கண்டனம்

ஜெனிவா, ஜூன் 11

சோவியத் எழுத்தாளர்களான அன்ரேய் சின்யவ்ஸ்கியையும் யூலி டேனியலையும் கடந்த பெப்ரவரி மாதம் விசாரணைசெய்து சிறையில் அடைத்தது; நீக்கமுற்றிலும் புறம்பானதொரு செயல் என்று சர்வதேச [illegible] டித்துள்ளது (பி. டி. ஸி.)

## ஜவுளிக்கடையில் சேலையுமில்லை; ஜனக்கூட்டமும் இல்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு

துணிகள் வாங்குவதற்காக நீண்டநேரம ஜவுளிக் கடை வாசல்களில் கியூவில் காத்துநிற்கும் கூட்டம் நேற்றுக் குறைந்துவிட்டது. மக்கள் எதிர்பார்த்த துணிகள் கடைகளில் இல்லாததுதான் இதற்கு காரணமென துணி வாங்க வந்தவர்கள் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை வீதியில் ஒரு கடையிலும், பெரிய கடையில் ஒரு கடையிலுமே நேற்றுக் கூட்டம். அதுவும் சிறிய அளவில் காணப்பட்டது

பிரதானவீதியில் உள்ள கடைகளில் ஒன்று இடைவேளைக்காக 3 மணிநேரம் பூட்டப்பட்டிருந்தது அவ்வீதியிலுள்ள மற்றும் கடைகளில் ஜனக்கூட்டமே காணப்படவில்லை.

பெரியகடையிலுள்ள ஒரு கடை வாசலில் பெண் கூட்டம் நின்றது. அவர்களிடம் கூப்பன் காணப்படவில்லை. அவர்கள் துணி வாங்க வரவில்லையென்றும் அக்கடையில் விற்பனை செய்யப்படும் தங்கவேலு குழுவின் நாடக டிக்கட் வாங்க அவர்கள் வந்திருப்பதும் பின்பு தெரிய வந்தது.

நேற்று நடைபெறவிருந்த திருமண எழுத்தொன்றிற்கு தூரஇடத்திலிருந்து சேலை வாங்க வந்த மாப்பிள்ளை வீட்டார் பல கடைகளுக்கும் சென்று, கடைசியில் சேலை வாங்காமலேசெல்ல நேர்ந்தது இதற்குக் காரணம் புதிய உத்தரவின்படி நேற்று எந்தக் கடையிலும், சேலை விற்காததுதான்

## தென்னாபிரிக்க நிறவெறிக்கு கெனடி கண்டனம்

தார்-எஸ்-ஸலாம், ஜூன் 11

இன வெறிக்கொள்கையினால் தென்னாபிரிக்க சுற்று விஜயம் எனக்குப் போதிய மகிழ்ச்சிதரவில்லை என்று செனட்டர் ரொபர்ட் கெனடி இங்கு நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் பேசுகையில் தெரிவித்தார்.

தன்ஸானியாவுக்குத் தனிப்பட்ட முறையில் நான்கு நாட்கள் விஜயம் செய்யும்பொருட்டு செனட்டர் ரொபர்ட் கெனடி நேற்று இங்குவந்து சேர்ந்தபொழுது அவருக்குச் சிறப்பான தொரு வரவேற்பு அளிக்கப்பட்டது

தென்னாபிரிக்காவில் நான்கு நாள் தங்கியிருந்த பின்னர் அவர் இங்கு வந்துள்ளார். இவரை வரவேற்பதற்காக விமான நிலையத்தில் அரசாங்க உயர் அதிகாரிகளுடன் பெருந்திரளான மக்கள் குழுமியிருந்தனர்.

விமான நிலையத்தில் செனட்டர்ரொபர்ட் கெனடி சுருக்கமாகப் பேசுகையில் அமெரிக்காவுக்கும் தன்ஸானியாவுக்குமிடையே விசேஷ நட்புறவு உண்டென்றும் இந்த நட்புறவு மனித வர்க்கத்தின் சமத்துவத்திற்காகவும் நீதிக்காகவும் போராடும் என்று வலியுறுத்தினர்.

செனட்டர் கெனடி இங்கு அதிபர் நியாரரேயுடனும் மற்றும் உயர் அதிகாரிகளுடனும் பேச்சுக்கள் நடத்துவார்.

### "அங்கு அதிருப்தி இங்கு திருப்தி"

பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் அவர் பேசுகையில், தென்னாபிரிக்க விஜயம் எனக்கு மகிழ்ச்சியை அளிக்காதபோதிலும் தன்ஸானிய விஜயத்தில்

8-ம் பக்கம் பார்க்க)

உ

புதுக்கடைத் திறப்புவிழா

அன்புடையீர்,

நிகழும் பராபவ வருஷம் வைகாசி மாதம் 31-ந் திகதி (13-6-66) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் வரும் சுபமுகூர்த்தத்தில்,

எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

வீ. எம். கே. தங்க மாளிகை

என்னும் புதிய கடையை சாவகச்சேரி பாராளுமன்றப் பிரதிநிதி திரு. வீ என். நவரத்தினம் அவர்கள் திறந்து வைப்பார்கள். அத்தருணம் தாங்கள் சமுகம் தந்து ஆசீர்வதித்தேகுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

"வீ, எம். கே.
தங்க மாளிகை"
கண்டி றோட்,
சாவகச்சேரி.

தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை.

இங்ஙனம்
வீ, எம். கணபதிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இலங்கைக்கு குடும்பக் கட்டுப்பாடு அவசியம்'

## காரைநகர் சுகாதார விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

''குடும்பநலத்திட்டம் மக்களின் நன்மைக்காக வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்களாகிய தமிழ் மக்கள் மேற்கொள்ளலாமா என்று சிலர் அஞ்சுகின்றனர். உலக வரலாற்றில் என்றுமே சிறுபான்மையினர் பெரும்பான்மையினராக மாறியதில்லை. இலங்கையில் பொருளாதார அபிவிருத்தி, சனத்தொகை பெருக்கத்திற்கு ஏற்ப விஸ்தரிக்கப்படவில்லை. இலங்கைக்குக் குடும்பக்கட்டுப்பாடு மிக அவசியமாகும்'' என யாழ்ப்பாணம் சுகாதாரக் கல்வியாளர் எஸ். பொன்னம்பலம் குடும்பக்கட்டுப்பாடு இலங்கைக்கு அவசியம் என்னும் பொருள் பற்றி சுகாதார விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

மேற்படி விழா காரைநகர் யாழ்நகர்க் கல்லூரியில் வட்டுக்கோட்டை எம். பி. திரு அமிர்தலிங்கத்தால் கொடியேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டது. காரைநகரைச் சுற்றி நடைபெற்ற சைக்கிள் ஓட்டப் போட்டியை காரைநகர் கடற்படைத் தளபதி திரு, லெப்டினண்ட் சில்வா ஆரம்பித்து வைத்தார். சைக்கிள் ஓட்ட வீரர்களை வழி மருங்கிலும் மக்கள் கூடிநின்று உற்சாகப்படுத்தினர். காரைநகர் பிரசவ நிலையத்தில் நடைபெற்ற குழந்தைகள் காட்சியில், சாம்பியன்குழந்தைகள் மூன்று தாய்ப்பால் ஊட்டப்பெற்ற குழந்தைகள், மூன்று மாப்பால் ஊட்டப்பெற்ற குழந்தைகள் மூன்று ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். காரைநகர் ஐக்கிய விளையாட்டுக் கோஷ்டிக்கும் காரைநகர் கடற்படைக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் காரைநகர் கடற்படைக் கோஷ்டியினர் வெற்றிபெற்றனர்.

காசநோய்பற்றிதிரு. தேவகடாட்சம் சொற்பொழிவாற்றும்போது எமக்கு காசநோயென மற்றவர்கள் அறிந்தால் இழுக்கென எண்ணி சிலர் மறைத்து வைத்திருக்கின்றனர். ஆரம்பத்திலே இதற்கு சிகிச்சை பெருது இப்படிச்செய்தால் சமுதாயத்திற்கே இவர்கள் பெரும் தீங்கு செய்கின்றனர் என்று குறிப்பிட்டார்.


காரைநகர் கிராம சபைத் தலைவர் திரு. கே. கே. விசுவலிங்கம் தமது தலைமையுரையில் பல வழியிலும் சுகாதாரத்தை பேணிச் சுகமாக வாழும் வழிகளைப்பற்றி எடுத்துரைத்தார்.


REGAL--JAFFNA
NOW SHOWING!
Cornel Wilde
Jean Wallace
in
Sword of Lancelot
(Cinemascope - Color

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - சாவித்திரி
நடித்த
பாச மலர்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
கல்யாணகுமார் - தேவிகா
நடித்த
நெஞ்சம் மறப்பதில்லை

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை) ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடேர்ன் (பதுளை)
தீவொளி (நுவரேலியா)



எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சத்தியாமூவிஸ்
தெய்வத்தாய்


இ. தொ காங்கிரஸ்

# உத்தேச வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்ள மாட்டாது

## பொதுக் காரியதரிசி விளக்கம்

கொழும்பு, சனி

இம்மாதம் 13-ந் திகதி நடாத்த உத்தேசித்திருக்கும் வேலைநிறுத்தத்தில் தங்களுடன் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்கும்படி ஜனநாயகத்தொழிலாளர் காங்கிரஸ் விடுத்த வேண்டுகோளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நிராகரித்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுக்காரியதரிசி ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் காரியதரிசிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:- வேலைநிறுத்தம் செய்ய வேண்டுமென்று நீங்கள் எடுத்த முடிவு ஒரு தலைப்பட்சமானது. எங்களையும் கலந்தாலோசியாது இத்தீர்மானத்தை எடுத்துள்ளீர்கள்.

ஒரு பொறுப்புள்ள ஜனநாயக சட்டதிட்டங்களுக்கமைய இயங்கும் தொழிற்சங்கமென்ற முறையில் நாங்கள் நிர்வாக கவுன்சிலின் அதிகாரமின்றி ஒரு தீர்மானத்தை செய்யமுடியாது.

எங்களுக்கு நிர்வாக கவுன்சிலினுல் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின்படி நாங்கள் எங்கள் பல கோரிக்கைகள் பற்றி இலங்கை தோட்ட முதலாளிகள் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தும் தறுவாயில் இருக்கின்றோம். ஆகையால் இச்சமயத்தில் நாங்கள் உங்களுடன் சேர்வோமானுல் எங்களுடைய அங்கத்தவர்களின் நலனைக் கைவிட்டு பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்பவர்களாவோம். ஆகையால் நீங்கள் உத்தேசித்த வேலைநிறுத்தத்தில் பங்குபற்ற முடியாதென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

# ''ஐயோ 'அம்மா அடியாதே' 'நீயும் போ' நானும் போறேன்'

## சிறுமியின் மரணவிசாரணையில் சிறிய தந்தை சாட்சியம்

கிளிநொச்சி, சனி

பரந்தன் குமரபுரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தங்கராணி எனும் எட்டு வயதுச சிறுமியின் மரணம் குறித்து கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் ஜே. பி. விசாரணை நடாத்தினுர்.

விசாரணையின்போது காலஞ்சென்றவரின் சிறிய தந்தை அப்புக்குட்டி பொன்னுத்துரை சாட்சியமளிக்கையில் காலஞ்சென்ற தங்கராணி எனது மனைவியின் முன்தாரப்பிள்ளையென்றும் அவர் எனது பராமரிப்பில் வசிப்பதாகவும் சம்பவதினத்தன்று காலஞ்சென்றவர் எனது சகோதரியின் வீடு சென்று திரும்பியதாகவும் எனது சகோதரியின் வீட்டுக்கு சென்றதற்காக தாய் அடித்தபொழுது காலஞ்சென்றவர் 'ஐயோ அம்மா அடியாதே' என்று குளறியதாகவும் அடுத்து சில விஞடிகளுக்குள் காலஞ்சென்றவர் உடல் முழுவதும் தீப்பற்றிய வண்ணம் வீட்டில் இருந்து வெளியில் வருவதையும் அவரைத் தொடர்ந்து தாயும் தீப்பிடித்த வண்ணம் 'நீ சொல்லுக்கேட்க மாட்டாய் நீயும் போ, நானும் போறன்' என்று கூறியபடி வெளியில் வந்து விழுந்ததாகவும் கூறினுர்.

பின்னர் இருவரும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு தங்கராணி அங்கு மரணமானுர். தாயார் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிருர்.

இறந்தவரின் தகப்பஞர் திரு. கணபதிப்பிள்ளையையும் குமரபுரத்தைச்சேர்ந்த திருமதி சிவரத்தினம் யோகம்மாவையும் தனது முன்னிலையில் ஆஜர்செய்யும்படியும், பொலிசாரைத் தொடர்ந்து புலன்விசாரணை செய்யும்படியும் மரண விசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி வைத்திய அதிகாரி லூக் சூசைப்பிள்ளை பிரேதபரிசோதனை நடாத்தினுர்.

தொடர்ந்து பொலிசார் புலன் விசாரணை நடைபெறுகிறது.

## மன்னுரில் கடுங்காற்று

### மீனவர் பாதிப்பு

மன்னுர், சனி

மன்னுர்ப் பகுதியில் கடந்த சில தினங்களாக கடுஞ் சோழகக்காற்று வீசுவதால் கடற்தொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக மன்னுர் மீன் சந்தையில் மீனுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

## அரசாங்கத்தின் புதிய திட்டங்கள்

சுழிபுரம், சனி

'எமது அரசாங்கம் நாட்டுக்கு ஏற்ற நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதில் அதிக கவனம் செலுத்துகின்றது. அதே நேரத்தில் விவசாய, கைத்தொழில் ஆகிய அபிவிருத்தியில் பல புதிய திட்டங்களையும் புகுத்திவருகிறது' என தீவுப் பகுதி காரியாதிகாரி திரு. பி எஸ். பற்றிக் காரைநகர் வடக்கு கிராம முன்னேற்றச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சங்க மண்டபத்தில் திரு. இ. கந்தையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு பி எஸ் பற்றிக் மேலும் பேசுகையில், கடவுள் பக்தியுடன் நாம் எக்காரியத்தையும் செய்ய வேண்டுமென்றும்அப்போதுதான் நாம் நன்மையடையலாமென்றும் சொன்னுர்.

புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் ஆ முருகேசு உபதலைவர் வே சுப்பிரமணியம் காரியதரிசி சு ராஜசேகரம். உப காரியதரிசி சா குணநாயகம், தனுதிகாரி ச விஸ்வநாதன், கணக்குப்பரிசோதகர்கள் ச சபாபதி, ச நல்லதம்பி இருபதுபேர் கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## ஜவுளிக்கடை தொழிலாளர்

கொழும்பு, சனி

ஜவுளிக் கடைகளிலுள்ள தொழிலாளர்களை, வேலைநீக்கம் செய்வதையோ, ஜவுளி கடையில் ஆட்குறைப்பு செய்வதையோ அனுமதிப்பதில்லையென தொழில்இலாகா தீர்மானித்துள்ளது.


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

விண்ணப்பப் படிவம்

பொலிஸ்படை விண்ணப்பப் படிவத்திற்கு 5 பத்துச்சத முத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். G. A. Q. பொருளியல் மாதிரி வினு விடை 12/-. மா. புவனேந்திரன் - வர்த்தகக் கல்விநிலையம், திருநெல்வேலி. 533

### வைத்தியம்

தொய்வு, கசம் நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக இலும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்


## பௌத்த கலாசாரமண்டபம்

### பிரதமர் அடிக்கல்நாட்டினுர்

கண்டி, சனி

கண்டியில் பௌத்த கலாசார மண்டபத்துக்கான அடிக்கல்லை நேற்று பிரதம மந்திரி திரு. டட்லிசேனநாயகா நாட்டினுர். இந்த மண்டபம் 2 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவிருக்கின்றது. இந்த மண்டபத்தில் சுமார் 1500 பேருக்கு இடம் உண்டு.

பிரதமமந்திரி கண்டி ஆஸ்பத்திரியில் பௌத்த பிக்குகளுக்கான 'வார்டு' ஒன்றையும் திறந்துவைத்தார். அப்பொழுதுஅவர் பேசுகையில், நாட்டு மக்களின் சௌக்கியம் நாட்டின்சுபிட்சத்துக்கு அவசியம் என்ருர்.

இந்த வைபவத்தில் வண. அமுனுகம விபாஸி மகாநாயக தேரோ, உதவிசுகாதார மந்திரி, திருமதி விமலா கன்னங்கரா, கண்டி மேயர் இ. எல். சேனநாயகா எம். பி. ஆகியவர்களும் கலந்துகொண்டார்கள்.

இந்த வைபவும் ஆரம்பமாவமுன்னர் டாக்டர் ஹெரத் செனவிரத்ன வார்ட்டை திறப்பதற்கான திறப்பை பிரதமரிடம் கொடுத்தார்,

## ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆனைக்கோட்டை சாவக்காட்டுக்கு அருகாமையிலிருக்கும் முருகமூர்த்தி கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த பத்துத் தினங்களாக சிறப்பாக நடைபெற்று இன்று சனிக்கிழமையுடன் முடிவுற்றது.

## பிரிட்டிஷ் துருப்புகள் வாபஸாகும்

லண்டன், ஜூன் 11

மலேசிய சமஷ்டிக்கும் இந்தோனேஷியாவுக்கும் மத்தியில் சமரச உறவுஸ்தாபிக்கும் பட்சத்தில் சபா, சரவாக் ஆகிய இடங்களிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் வாபஸ்பெறப்படும். இவ்விஷயத்தில் மலேசிய அரசாங்கம் கொண்டிருக்கும் விருப்பத்தையே பிரிட்டனும் ஆதரிக்கிறது.

இத்தகவலை பிரிட்டிஷ் காமன்வெல்த் விவகார அமைச்சைசேர்ந்த அதிகாரி ஒருவர்வெளியிட்டார். மலேசிய அரசாங்கத்தின் வேண்டுகோளின்பேரில் இருநாடுகளுக்கும் மத்தியிலானபாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழே பிரிட்டிஷ் துருப்புகள் இங்கு அனுப்பப்பட்டதாகவும் அவர் விளக்கினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸாமில் பெருவெள்ளம்; போக்குவரத்து துண்டிப்பு

## பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் அதிகம்

ஷில்லாங், ஜூன் 11
அஸ்ஸாம் ராஜ்யத்தில் பிரம்மபுத்திரா நதியும் அதன் கிளைகளும் கடும்மழை காரணமாகப் பெருக்கெடுத்திருப்பதால் ஐந்து ஜில்லாக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளப்பெருக்கினால் கௌஹாட்டிப் பகுதி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ரயில் சேவைகள், மற்றும் போக்குவரத்துச் சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

பெருந்தொகையான மக்கள் தங்கள் வீடுவாசல்களை இழந்துள்ளனர். வெள்ளம் பாயும் இடங்களிலுள்ள மக்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு மேட்டுப்பாங்கான இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

நேற்று மூவர் வெள்ளத்துக்குப் பலியானார்கள்.

மணிப்பூரிலும் நதிகள் யாவும் பெருக்கெடுத்துள்ளன. பலர் வீடுவாசல்களை இழந்துள்ளனர். பெருமளவில் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டிருக்குமென அஞ்சப்படுகிறது.

சிக்கிமில் காங்கொக் நகரிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டுள்ளதாக அஞ்சப்படுகிறது.

## டாக்கா மெயில் ரயில் தடம்புரண்டு நால்வர் பலி

டாக்கா, ஜூன் 11
டாக்கா-சிட்டகாங் மெயில் ரயில்வண்டி, நாசவேலை காரணமாக நேற்று முன்தினம் தடம்புரண்டதில் நால்வர் மாண்டனர் என்றும் 70பேர் காயமடைந்தனரென்றும் அறிவிக்கப்பட்டது.

ரயில் பள்ளத்தில் வீழ்ந்ததுடன் பாலம் நாசமடைந்ததென்றும் ரயில்வே மந்திரி தெரிவித்தார்.

மாகாணசுயாட்சி, உணவு தானியக் குறைப்பு ஆகியவைகளுக்காக நடைபெற்று வரும் கிளர்ச்சியே இந்த ரயில் விபத்துக்கும் காரணமாகும்.

இந்த ரயில் விபத்து பற்றியும் மற்றும் அவசரப் பிரச்னைகள் பற்றியும் விவாதிப்பதற்கு கிழக்கு பாகிஸ்தான் மாகாண சட்ட சபையில் எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த மூன்று அவசரப்பிரேரணைகளும் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து சபையில் சிறிது நேரம் அமளி துமளி ஏற்பட்டது. பின்னர் எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

## சரவாக், சபாவிலிருந்து இந்தோனேஷிய துருப்புகள்வாபஸ்

சிங்கப்பூர், ஜூன். 11
சரவாக், சபா எல்லை (காட்டு) பகுதியில் நிலை கொண்டிருந்த இந்தோனேஷியத் துருப்புகளில் பத்து சதவிகிதத்தினர் இப்பொழுது விலக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவவட்டாரங்களிலிருந்து நம்பகமாகத் தெரியவருகிறது..

அண்மையில் பாங்காக்கில் இந்தோனேஷியாவுக்கும் மலேசியாவுக்கு மிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பயனாக இந்தோனேஷியத் துருப்புகள் 'நெருக்கடி' பகுதிகளிலிருந்து சிறிதளவு விலக்கப்பட்டிருப்பதாக இங்கு கூறப்படுகிறது.

சரவாக், சபா எல்லையில் 15,000 முதல் 20,000 இந்தோனேஷியத் துருப்புகள் இருக்கின்றன.

(பி. டி. ஐ.)

### கைக்குண்டு விபத்துகள்

ஏடன், ஜூன் 11
இங்கு ஏற்பட்ட மூன்று கைக்குண்டு விபத்து சம்பவங்களைத் தொடர்ந்து பதினன்கு பேரை பிரிட்டிஷ் துருப்புகளும் ஏடன் பொலிசாரும் கைதுசெய்துள்ளனர்.

இந்த விபத்துகளின் விளைவாக இருவர் மாண்டனர். 12 பேர் காயமடைந்தனர்.

(பி டி ஐ)

### புதுச்சேரியில் சிமெந்து ஆலை

பாண்டிச்சேரி. ஜூன் 11
புதுச்சேரியில் விரைவில் ஒரு சிமெந்துத் தொழிற்சாலை நிறுவப்படுமெனபுதுச்சேரி லெப்டினன்ட் கவர்னர் ஸ்ரீ சைலம் நேற்றுத் தெரிவித்தார்.

### ரயில் நிறுத்தம்: 127 பேர் கைது

பெல்காம், ஜூன். 11
மைசூர்-மகாராஷ்டிர எல்லைப் பிரச்னை சம்பந்தமாக ஒரு தீர்வுகாணும்பொருட்டு ஆராய்வதற்காக தனிநபர் விசாரணைக்கமிஷன் ஒன்றை நியமிப்பதென்ற யோசனையை எதிர்த்து ரயில்களை தடுத்து நிறுத்தும் இயக்கத்தில் ஈடுபட்ட 127 பேர்கள் நேற்று கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் மைசூர் மேல்சபை அங்கத்தவரும் ஒருவராவர்.

### காமன்வெல்த் பிரதமர் மகாநாடு
#### தான்ஸானிய அதிபர் செல்லமாட்டார்

தாருல்இஸ்லாம், ஜூன் 11
எதிர்வரும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லையென தான்ஸானியா அதிபர் ஜூலியஸ் நியார்ரரே அறிவித்துள்ளார்.

ரொடீஷியப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காணுதவரை காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொள்வதில் அர்த்தமில்லையென அவர் கூறினார்.

### ஜாகர்த்தாவில் புட்டோ

ஜாகர்த்தா, ஜூன். 11
பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி ஜுல்பிகார் அலிபுட்டோ நேற்று ஜாகர்த்தாவில் இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரியையும் ஜெனரல் சுகார்டோவையும் சந்தித்துப் பேசினார்.

### கெய்ரோவில் சிரிய மந்திரி

கெய்ரோ, ஜூன் 11
சிரியாவின் வெளிவிவகார மந்திரி நேற்று ஐக்கிய அரபுக் குடியரசுக்கு விஜயம் செய்தார். 1961ம் ஆண்டில் ஐக்கிய அரபுக் குடியரசிலிருந்து சென்ற பின் சிரியா மந்திரி இத்துடன் மூன்றாவது தடவையாக இங்கு வந்துள்ளார்.

### தங்கக்கட்டுப்பாடு தேவையில்லை

பங்களூர், ஜூன் 11
தங்கக்கட்டுப்பாட்டுத் திட்டம் அதன் நோக்கத்துக்கு எதிர்மாறான முறையில் செயல்படுவதால் அத்திட்டத்தை வாபஸ் பெற்றுவிடவேண்டுமென திரு. மொரார்ஜி தேசாய் நேற்றுத் தெரிவித்தார்.

### உறவு முடிந்தது

ஹைதராபாத், ஜூன் 11
சீன கம்யூனிஸ்ட் சார்பினருக்கும் தங்கள் கட்சியினருக்குமிடையில் உள்ள உறவு முற்றிலும் முறிந்துவிட்டது என்று சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் ஒரு தெரிவித்தார்.

### ரஷ்யாஉதவி நீடிக்கும்

மாஸ்கோ. ஜூன் 11
வடக்கு வியட்நாமுக்கு சோவியத் யூனியன் தொடர்ந்து உதவியளித்து வரும் என்று சோவியத் கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் திரு. பிரஸ்னேவ் நேற்று ஒரு வைபவத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

வியட்நாம் சம்பந்தமாக அமெரிக்கா கடைப்பிடிக்கும் கொள்கையை அவர் கண்டித்தார்.

உலக சமாதானத்தை பாதுகாக்க ஐரோப்பியநாடுகளுடன் ஒத்துழைக்கசோவியத் யூனியன் தயாராகஇருக்கிறதென்றும் அவர் சொன்னார்.

# ஐ. அ. குடியரசு எமது பகைநாடல்ல

## சவூதி அரேபிய மன்னர் கருத்து

அம்மான், ஜூன் 11
ஐக்கிய அரபுக் குடியரசு தமது எதிரியென்று சவூதி அரேபியா கருதவில்லை என்று சவூதி அரேபிய மன்னர் பைசல் தெரிவித்துள்ளார்.

"இரு நாட்டு நெருக்கடிகளைப் பொறுத்த மட்டில் ஐக்கிய அரபுக்குடியரசு எமது சகோதர நாடென்றே கருதுகின்றோம். இரு நாட்டு மக்களின் நலனை முன்னிட்டு தகராறுகள் தீர்க்கப்பட வேண்டும்" என்றும் மன்னர் கூறினார்.

மெக்கா வானொலிக்கு அளித்த பேட்டியொன்றில் தான் மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டார்.

"மற்றுமொரு நாட்டின் விவகாரத்தில் தலையிடுவது எனது நாட்டின் நோக்கமல்ல" என்றும் அவர் தெரிவித்தார். (பி.டி.ஐ)

### சிங்கைக்கு இந்திய தூதர்

சிங்கப்பூர், ஜூன் 12
இந்தியா தனது முதலாவது ஹைகமிஷனரை விரைவில் சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்கவிருக்கிறது.

சிங்கப்பூரில் இந்திய ஹைகமிஷனராக திரு. சுரேந்திராசிங் அலிரஜ்பூர் பதவியேற்பார் எனத்தெரியவருகிறது.

(பி. டி. ஐ.)

### ஹீத்

ஸ்டாக்ஹோம், ஜூன் 11
அடுத்த இரண்டு வருடகாலத்துக்குள் ஐரோப்பிய பொதுச்சந்தையில் பிரிட்டன் பிரவேசிக்கும் என்பதில் தமக்கு நம்பிக்கையில்லை என்று பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவர் திரு. எட்வேர்ட் ஹீத் தெரிவித்துள்ளார்.

(பி. டி. ஐ.)

### சைப்ரஸ் பிரச்னை

பிரஸல்ஸ், ஜூன் 11
சைப்பிரஸ் பிரச்னை குறித்து இருநாடுகளினதும் தூதர் மட்டத்தில் பேச்சுக்கள் நடத்த கிரீஸும் துருக்கியும இணங்கியுள்ளன.

(பி. டி. ஐ.)

### கடும்வெப்பம்: 6 பேர் பலி

டெஹ்ரான், ஜூன் 11
கடந்த 24 மணி நேரத்தில் இங்கு நிலவிய கடும்வெப்பத்தினல் 6 பேர் மண்டனர்.

(பி. டி. ஐ.)

### ஜாகர்த்தாவில் புட்டோ

ஜாகர்த்தா, ஜூன்11
பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. புட்டோ இங்கு விஜயம் செய்துள்ளார். அவர் இங்கு நான்கு தினங்கள் தங்கியிருப்பார்.

(பி டி ஐ)

### கி. ச. தேர்தல்

உடுப்பிட்டி, சனி
உடுப்பிட்டிக் கிராமசபை பொதுத் தேர்தல் இம்மாதம் 21-ம் திகதி நடைபெறும். கிராமசபையின் 24 வட்டாரங்களில் மொத்தம் 53 பேர் போட்டியிடுகின்றனர்.

13-ம் வட்டாரத்தில் திருமதி மாதுசிரோன்மணி முத்துராசா என்ற பெண்மணியும் போட்டியிடுகிறார்.

### மருந்து தட்டுப்பாடு

ஊர்காவற்றுறை, சனி
ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரியில் மருந்துக்குப்பெரும் தட்டுப்பாடு இருந்துவருகிறது.

நோயாளர்கள் பலர் தமக்குத்தேவையான மருந்துகளை வெளியில் இருந்துபெற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. மருந்துத்தட்டுப்பாட்டையிட்டு வைத்திய அதிகாரி மேலிடத்திற்குப் புகார்செய்துள்ளார். வெளியில் மருந்து வேண்டவசதியற்ற நோயாளர்கள் ஆஸ்பத்திரியே தஞ்சம் எனக்கருதி ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் இருக்கிறார்கள்.

# "ஒன்றுபட்ட உறுதியான முயற்சிவேண்டும்"

## நாட்டின் பிரச்னைகளை தீர்க்க இந்திரா கோரிக்கை

ராய்பூர், ஜூன் 11
'நாட்டை எதிர்நோக்கியுள்ள கஷ்டங்களை சமாளித்து வெற்றிபெறுவதற்கு ஒன்றுபட்ட உறுதியான முயற்சி தேவை' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி ராய்பூரில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

மத்தியபிரதேசத்தில் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட பிரதமர் பின்னர் பொதுக்கூட்டத்தில் பேசினார்.

"இன்றுள்ள கஷ்டங்களை நீக்குவதற்கு நாம் ஒன்றுபட்டு உறுதியான முயற்சி செய்யவேண்டும். இல்லையேல் மேலும் சிக்கலான நிலையே ஏற்படும். நாடு இன்று [illegible] இன்றும் மிக மோசமான [illegible] பாதிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த சில மாதங்களும் பெரும்சோதனை நிறைந்த காலமாக இருக்கக்கூடும். இந்த நிலையை சமாளிப்பதற்கு ஒன்றுபட்ட உறுதியான முயற்சி அவசியம்" என்று திருமதி இந்திரா கூறினார்.

"கடின உழைப்பினல் தான் முன்னேற்றம் காண முடியுமேதவிர, முன்னேற்றத்துக்குக் குறுக்குவழி கிடையாது. சிறியஅளவு திட்டங்கள் தற்போதைய பிரச்னையைத் தீர்க்கக்கூடும் ஆனல் நீண்ட காலத்திற்கு இவை பயனளிக்கமாட்டா" என்றும் பிரதமர் சொன்னார்.

சென்ற இரண்டு வருடங்கள் நாட்டின் முன்னேற்றம் வெகுவாகப் பாதிக்கப்பட்டவருடங்களென்றும் அந்நிய ஆக்கிரமிப்பும் மழையின்மையும் இதற்குக் காரணமென்றும் அவர் கூறினார்.

விளைபொருள் உற்பத்தியை அதிகரிக்கவேண்டுமென்று கூறிய பிரதமர், நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டதெனினும் பஞ்சத்தினல் பெருமளவு மரணம் ஏற்பட்டுள்ளதென்பது சரியல்ல என்றும் கூறினார்.

விவசாயத்துக்கும்தொழில் விருத்திக்கும் அந்நிய செலாவணியைப் பயன்படுத்த வேண்டுமென்று கூறிய பிரதமர் ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டதால் உள்நாட்டு உற்பத்திப்பொருள்கள் விலை அதிகரிப்பதற்குக் காரணமில்லையென்றார்.

ரூபாயின் விலை மதிப்புக் குறைக்கப்பட்டது மந்திரி சபையின் ஒருமனதான தீர்மானத்தின் மீதேயென்றும் அவர் சொன்னார்.

இந்தியா எந்தப்பக்கமும் சாராதில்லையென்றும் தேசிய நலனைக் கருதியே வெளிவிவகாரக் கொள்கை வகுக்கப்படுகிறதென்றும் பிரதமர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தன்னலமுள்ள மனதில் மகிழ்ச்சி இராது. அது அற்ற இடத்தில் தான் இன்பமிருக்கும். இதைத் தெரிந்தவர்களும், 'நான்' என்ற உணர்ச்சியைவிட முடியாமல், ஆசைகளால் அமுக்கப்பட்டு துயரப்படுகின்றனர். தெய்வீக உணர்ச்சியால் எல்லாரிடமும் அன்புகாட்டுவதன் மூலமே இதிலிருந்து விடுபட முடியும்.

—சுவாமிராமதாஸ்.

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு வைகாசி மீ 30 உ (12-6-66)

# தடுப்புமுகாமின் சோகக் கதை

சட்டவிரோதக்காரர் என பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கொம்பனித்தெரு தடுப்புக்காவல் முகாமை நேரில் சென்று பார்வையிட்ட தமிழரசுக்கட்சித் தலைவர்கள் அங்கு அடைத்து வைக்கப்பட்டிருக்கும் மக்களின் சோகக் கதையையும் கேட்டறிந்திருக்கின்றனர். இச்செய்தி நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகியிருந்தது. கொம்பனித் தெருதடுப்புக்காவல் முகாமின் நிலையும் அங்குள்ள மக்கள் படும் அவஸ்தையும் இலங்கைக்கு நிச்சயம்பெருமை தராது.

240 பேர் மட்டும் தங்கியிருக்கக்கூடிய கொட்டில்களில் 405 ஆண்களில் 12 பெண்களும் குழந்தைகளும், ஆடுமாடுகளையும் விடகேவலமாக அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். பசியைத் தணிக்கக்கூடிய அளவு உணவும் கிடைப்பதில்லை; படுத்து உறங்குவதற்கும் இடமில்லை. மலசலகூட வசதியும் கிடையாது. இவர்களில் பலர் ஒருவருடத்துக்கும் மேலாக இந்த முகாமில்அடைத்து வைக்கப்பட்டிருப்பவர்கள்.

இத்தனை பேரும் சட்டவிரோதமாகக்குடியேறும் பொழுது கைது செய்யப்பட்டவர்களா? இல்லை. சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் என்று பொலிசாருக்கோ, இராணுவத்தினருக்கோ எவராவது மொட்டைக் கடிதம்எழுதினல் உடனே அந்தக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டவரைக் கைது செய்து முகாமில் அடைத்துவிடுகின்றனர். விசாரணை எதுவும் கிடையாது. மொட்டைக் கடிதம் எழுதியவரைக்கண்டு பிடிக்கவோ அவர் எதற்காக இத்தகவலைக்கொடுத்தார் என்பதைஅறியவோ முயற்சிசெய்யப்படுவதில்லை. கடன்வாங்கியவர்கள் கடனைத்திருப்பிக் கொடுப்பதற்குப் பதிலாகவும் வேலைவாங்கியதற்கு கூலி கொடுப்பதற்குப்பதிலாகவும் மொட்டைக் கடிதத்தின் மூலம் அவர்களை முகாமுக்கு அனுப்பிவிடுகிறார்களாம். தனிப்பட்ட கோபதாபமும் இந்தக் கைங்கரியத்தைச் செய்துவிடுகிறது. இதில் உண்மையிருக்கிறதென்பதற்கு, இங்கேயே மணம் செய்து குழந்தைகளையும் பெற்று நீண்டகாலமாக வாழ்ந்தவர்களும் கூட முகாமில் அடைத்துவைக்கப்பட்டிருப்பது உதாரணம். கொலைக்குற்றம் செய்தவர்களும், கொள்ளையடித்தவர்களும் கூட விசாரணையின் பின்னரே கைது செய்யப்படுகிறார்கள். அவர்களையும்கூட குறிப்பிட்ட சில தினங்களுக்குமேல் பொலிஸ்பாதுகாப்பில் வைத்திருக்க முடியாது. ஓரளவு வசதியுடைய 'ரிமாண்ட்' சிறையில் வைக்கவேண்டும். அல்லது பிணையில் செல்ல அனுமதிக்கப்படவேண்டும். பல வருடங்களாக இங்கு வாழ்பவர்களை நள்ளிரவிலும் திடீரெனக் கைது செய்து விசாரணை இல்லாமல் முகாமில் அடைத்து வைப்பதும்; அரை வயிறு, கால் வயிறுக்கு உணவு கொடுத்து பட்டினி போட்டுக் கொல்வதும் நியாயமாகாது. தகுந்த விசாரணையின்பின் கைது செய்யவேண்டும். கைது செய்யப்பட்டவர் சட்டவிரோதக் குடியேறக்காரர்தான் என்பது நிரூபிக்கப்பட்டால் அவரை தாமதமின்றி உடனடியாக தாய்நாட்டுக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும். இல்லையேல் தகுந்த உத்தரவாதத்துடன் பிணையில் விடப்படவேண்டும். இதுவே முறையாகும். எக்காரணத்தைக் கொண்டும் இரண்டு மாதத்துக்குமேல் தடுப்புக்காவல் முகாமில் எவரையும் வைத்திருப்பது சரியல்ல.

சட்டவிரோதக்குடியேற்றக்காரராலும் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின்மீது தடுப்புக்காவலில் வைக்கப்படுபவர்களானாலும் அவர்கள் எல்லோரும் மனிதர்களே. மனிதாபிமானம் பற்றி அதிகம் பேசும் நாம் மனிதர்கள் விஷயத்தில் மனிதத்தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

இலங்கை ஒரு பௌத்த நாடு என்றும் பௌத்த தர்மத்தை கடைப்பிடிக்கும் நாடு என்றும் பெருமை பேசும் நாம் மனிதர்களை அடைத்து வைத்து பட்டினி போடுவதும் அவஸ்தைப்படுத்துவதும் நம் நாட்டுக்கு அவமானத்தைத் தேடித் தருவதாகும். குடியேற்ற வெளியேற்ற இலாகாவிலுள்ள பலர் முன்னைய அரசாங்கம் கடைப்பிடித்த கெடுபிடி முறைகளையே பின்பற்றுவதாகத் தெரிகிறது. இது இன்றைய அரசாங்கத்துக்கு இழுக்கைத் தேடித் தருவதாகும். தடுப்புக்காவல் முகாமின் நிலையை நேரில் பார்த்த தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பிரதமரிடம் இதை எடுத்துக் கூறி அங்குள்ளவர்களுக்கு நீதி கிடைக்க வழி செய்ய வேண்டும். இலங்கையின் நற்பெயரைக் காப்பாற்ற எதிர்க்கட்சியினரின் உதவியையும் நாடுவது நல்லது

## இலாகாக்கள் மாற்றம்

கொழும்பு, சனி

கூட்டுறவு இலாகாவைவர்த்தக அமைச்சிலிருந்தும் எடுத்து விவசாய உணவு அமைச்சின்கீழ் பிரதம மந்திரி கொண்டுவந்துள்ளார்.

கல்வி கலாச்சாரபகுதியின் கீழ் இயங்கிவந்த படம்தயாரிப்பு பகுதியையும் பிரதமர் பொறுப்பேற்றுள்ளார்.

# முதல்தமிழ் அகராதி

## தமிழ் அகராதிகலை வரலாறு

— சுந்தரசண்முகனுர், புதுச்சேரி —

அகராதிபற்றிய கலை அகராதிக் கலை. ஒரு மொழியிலுள்ள சொற்கள் அகரவரிசையில் அடுக்கிப் பொருள் கூறப்பட்டிருக்கும் நூல் அகராதி எனப்படும். இத்தகு அகராதிகளைப் புதுப்புது முறையில்அமைப்பதில்காட்டப்படும் அறிவு நுட்பமும் செயல்திறனும இத்துறை பற்றிய ஆராய்ச்சியும் அகராதிக்கலை எனப்படும்.

### முதல் தமிழ் அகராதி

இன்றைக்கு மூவாயிரம் (கி.மு.1000) ஆண்டுக்குமுற்பட்ட தொல்காப்பியச் சொல்லதிகாரத்திலுள்ள 'உயிரியல்' என்னும் பிரிவில் 120 உயிர்ச் சொற்கட்குப் பொருள்கள் கூறப்பட்டுள்ளன. இதனை முதல் தமிழ் அகராதி எனலாம்.

### தனிநூல்களின் தோற்றம்

இது கண்ட புலவர் சிலர், உயிர்ச் சொல்லுக்கேயன்றி, பெயர்ச் சொல், வினைச் சொல், திசைச்சொல் முதலியவற்றிற்கும் தனி நூல்களில் செய்யுள் நடையில் விரிவாகப் பொருள் கூறத் தொடங்கினர். ஆயிரக் கணக்கில் தோன்றிய இத்தகு அகராதித்துறை நூற்கள் 'உரிச்சொல்' என்னும் பொதுப் பெயரால் அழைக்கப்பட்டன. அழிந்தன போக, கிடைத்துள்ளஉயிர்ச்சொல் நூற்களுள் காலத்தால் முற்பட்டவை கி.பி. எட்டாம்நூற்றுண்டினவாய சேந்தன் திவாகரம், பிங்கலம் என்னும் இரண்டுமாம். இவற்றுக்கு முன்னும் பின்னும் பல நூல்கள் தோன்றி மறைந்தன. இவற்றையடுத்துக் கிடைத்துள்ளநூல் பதினாரும் நூற்றுண்டின் முற்பகுதியைச் சேர்ந்த 'சூடாமணி நிகண்டு' என்பதாகும்.

### உலகமுதல் அகராதி

கி. பி. 1594-ம் ஆண்டில், சிதம்பர இரேவண சித்தர் என்னும் புலவர், சொற்களை அகரவரிசையில் அடக்கி 'அகராதி நிகண்டு' என்னும் பெயரில் ஒரு நூல் இயற்றினுர். அகரவரிசையில்அமைக்கப்பட்ட உலக முதல் அகராதி இதுதான்.

### மறுமலர்ச்சி

17-ம் நூற்றுண்டில் தமிழகத்திற்கு வந்த ஐரோப்பியப் பாதிரிமார்கள், செய்யுள்நடையைமாற்றி, சொற்களை ஒன்னன்பின் ஒன்ருக அகரவரிசையில் அடுக்கிப் பொருள் கூறி அகராதித்துறையில் மறுமலர்ச்சியை உண்டாக்கினுர்கள். தமிழுக்குத்தமிழ் அகராதியேயன்றி, தமிழோடு போர்த்துக் கீசியல், இலத்தீன், பிரெஞ்சு, ஆங்கிலம் முதலிய மொழிகள் பிணைந்த இருமொழி—மும்மொழி அகராதிகளெல்லாம் அமைத்தனர் இவர்கள் வந்தபிறகு நிகண்டு என்னும் பெயரும் மறைய 'அகராதி' என்னும் பொதுப் பெயரே நிலைத்துவிட்டது.

### பலைதுறயகராதிகள்

இருபதாம் நூற்றுண்டில் பல்வகை மொழியகராதிகளேயன்றி, தனிநூல் அகராதி, தனித்துறை அருஞ்சொல்விளக்க அகராதி, கலைச்சொல்அகராதி, சொற்பிறப்பு அகராதி, ஒப்பியல் அகராதி, தொகைஅகராதி, தொடையகராதி, கலைக்களஞ்சியம், பழமொழியகராதி, புலவர் அகராதி, இலக்கிய அகராதி முதலிய பல்துறையகராதிகள் நூற்றுக்கணக்கில் தோன்றித் தமிழ் மொழியை வளங்கொழிக்கச் செய்தன.

# புகையிலை, ஈரவெங்காயம் பற்றி பருத்தித்துறை எம். பி. கேள்வி

கொழும்பு, சனி

பிரதிநிதிகள்சபை ஜூன் மாதம் 21-ம் திகதி கூடும் பொழுது பருத்தித்துறைப் பிரதிநிதி திரு. கே. துரைரத்தினம் பின்வரும் கேள்விகளை வர்த்தக அமைச்சரிடமிருந்தும், கமத்தொழில் மந்திரியிடமிருந்தும் கேட்பதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

(அ) ''வடமராட்'"சிப் புகையிலை என்ற ஒருவகைப் புகையிலை பாவனையிலிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில் இப்புகையிலையை இந்தியா, மலேசியா, ஆபிரிக்கா சீனு, ஆகிய நாடுகளில் சந்தைப்படுத்துவதற்கு வேண்டிய வழிவகைகளை அவர் கையாளுவாரா?

(இ) இவ்வாண்டு மார்ச் மாதம் தொடக்கம் செப்டம்பர் மாதம்வரை யாழ் மாவட்டத்திலுள்ள ஈரவெங்காய விளைவு சென்ற ஆண்டிலும் பார்க்க 80,000 அந்தர் கூடுமென எதிர்பார்க்கப்படுவதை அவர் அறிவாரா?

(ஈ) இதற்கேற்றவாறு பம்பாய் வெங்காயத்தின் இறக்குமதியை அவர் குறைப்பாரா? இல்லையெனில் ஏன்?

வடக்கு,கிழக்கிற்கு

# இதுவரை அனுப்பிய சிங்கள ஆசிரியர்கள் தொகை என்ன?

## எம. பி. சபையில் கேட்பார்

கொழும்பு, சனி

பிரதிநிதிகள் சபை ஜூன் மாதம் 21-ந் திகதி கூடும்போது திரு. வை. துடாவே பின்வரும் வினுக்களை கல்வி கலாச்சார விவகார அமைச்சரைக் கேட்பதற்குமுன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

(அ) இலங்கையிலுள்ள பாடசாலைகளனைத்திலும் கல்விகற்கின்ற மாணவர்கள் அரசகருமமொழியில் தேர்ச்சி பெறுவதற்கென ஊக்கமளித்தலும் உதவிபுரிதலும் தான் அரசாங்கத்தின் கொள்கையென்பதை அவர் அறிவாரா? (ஆ) ஆமெனில் (1) வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் (2) இலங்கையில் மற்றைய பாகங்களிலுமுள்ள பாடசாலைகளில்கல்விகற்கும் சிங்களவர்களல்லாத மாணவர்களுக்குச் சிங்களம் கற்பிப்பதற்கென ஆசிரியர்களை நியமிப்பதற்குச் செய்யப்பட்டுள்ள ஒழுங்குகள் யாவை.

(இ) சிங்கள மொழிமூலம் கல்வி கற்பிக்கப்படுகின்ற பாடசாலைகளைத்தவிர, வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள ஏனையபாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு? இத்தகைய பாடசாலைகளுள் எத்தனைக்கு இற்றைவரை சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்?

(ஈ) இப் பாடசாலைகளுக்கு அத்தகைய ஆசிரியர்களை அனுப்புவதற்கு ஒழுங்குகள் எதுவும் மேற்கொள்ளப்படாதிருப்பின் ஏன் மேற்கொள்ளப்படவில்லை?

# ஐயாறன் எழுதுகிறது

தங்கவேலு - சரோஜா கோஷ்டியினர் யாழ்ப்பாணத்தில் நடத்திய 'விமலா' நாடகத்துக்குச் சென்றிருந்தேன். குடும்பம் குடும்பமாகப் பல்லாயிரக் கணக்கானவர்கள் கூடியிருந்தனர். மூன்றரை மணி நேரம் போனதே தெரியவில்லை. அதில் மூன்று மணி நேரமும் சிரிப்பும் களிப்பும் தான்.

சுமார் 30 பேருக்குமேல் அடங்கிய இப்பெரிய நாடகக் குழுவையும் பல அரிய 'சீன்'களையும் இந்தியாவிலிருந்து இக்காலத்தில் எப்படி இங்கு கொண்டுவரமுடிந்ததென்பது ஆச்சரியம் ராமேஸ்வரம்-தலைமன்னர் கப்பல் வழியாகத்தான் வரவேண்டும். அந்தப் பாதையிலுள்ள சங்கடங்கள் கொஞ்சமன்று கப்பல் வசதி இருப்பின் இன்னும் பல அரிய 'சீன்'களைக் கொண்டுவந்திருக்கலாமென்று நடிகர் தங்கவேலு கூறினுர் வேதாரண்யம் - காங்கேசன் துறைப் பாதையைத் திறந்துவிட்டால் எவ்வளவோ நன்மையாக இருக்கும். ஆனுல் அது எப்போது?

எப்படியும் இக்கோஷ்டியினரை இங்கு வரவழைத்தது பகீரதப்பிரயத்தனம். அவர்கள் ஈழத்துக்கு வந்து வெற்றிகரமாக நாடகங்கள் நடத்தி. பல்லாயிரக்கணக்கானவர்களை மகிழ்வித்ததற்காக ஈழமக்களின் நன்றி அவர்களுக்கு உரியதாகும். சிறப்பாக கன்னுதிட்டி ஸ்ரீ காளிகாதேவியின் அருள் இல்லாவிடில், இக்கோஷ்டியினர் இங்கு வந்து நம்மை மகிழ்வித்திருக்க முடியுமா என்பது மிக சந்தேகம்.

ஃ ஃ ஃ

மணி அடித்து, மேளம் கொட்டி அழைத்தாலும் கோவில்களுக்கு மக்கள் வருவதுமிகமிகக்குறைவு ஆனுல் நாடகம், சினிமா முதலியவற்றுக்கு மணிக்கணக்கில் 'கியூ'வில் நின்று காசுகொடுத்து மக்கள் திரள்திரளாகச் செல்லுகின்றுர்கள் ஏன்? நல்ல காரணம் இருக்கத்தான்வேண்டும்.

நம்மையும் நமது பிரச்னைகளையும் சற்று நேரமாவது மறந்திருக்கவேண்டுமென்றே நாம் இவ்விதம் பொழுது போக்குகின்றோம். இதற்கு உதவி செய்யும் அருங்கலைஞர்கள் சமூகத்துக்கு நல்ல சேவை புரிகின்றனர். அதிலும் நம்மை நகைக்கவைக்கக் கூடியவர்கள் செய்யும் பணி மிகப்பெரிது.

ஆங்கிலத்திலே ஒரு வசனமுண்டு 'ஏ லாப் ஏடே கீப்ஸ் த டாக்டர் அவே' (ஒரு நாளுக்கு ஒரு சிரிப்பு டாக்டரை தூரத்தள்ளி வைக்கும்) அதாவது சிரிப்பதால் உடல்நலம் மேலாக இருந்து நோய் நொடிகள் வராவென்றும், ஆகவே டாக்டரிடம் செல்லத்தேவை இராதென்பதுமே கருத்து. அப்படிப் பார்த்தால் அன்று மூன்று மணி நேரச் சிரிப்பு எவ்வளவு நன்மைசெய்யும்?

இடையிலே வந்துவிடலாமென்று தான் சென்றேன். ஆனுல் நாடகப்போக்கும் நகைச்சுவையும் என்னை கடைசிவரை அங்கேயே இருக்கச் செய்துவிட்டது.

ஃ ஃ ஃ

எதிர்க்கட்சிப் பத்திரிகைகள் சில இக்கலைஞர்கள் வருவதைப் பற்றி குறைகூறி எழுதுகின்றன. அப்படி எழுதுகிறவர்கள் அரசியல்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹூவே நகரில் இராணுவச் சட்டம் பிரகடனம்

## உண்ணுவிரதமிருந்த பௌத்தகுரு ஆஸ்பத்திரியில் அனுமதி

### அரசாங்க துருப்புகள் விரைகின்றன

சைகோன், ஜூன் 10

நெருக்கடி நிலவும் தென்வியட்னும் நகர் ஹூவேயில், தென்வியட்னும் அரசாங்கம் இராணுவ சட்டத்தை அமுல்செய்துள்ளது. இரவு ஒன்பது மணி முதல் காலை ஆறு மணிவரை இச்சட்டம் அமுலிலிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்வியட்னும் அரசாங்கத்தையும் அரசாங்கத்துக்கு ஆதரவளித்துவரும் அமெரிக்காவையும் எதிர்த்து பௌத்தர்கள் ஆர்ப்பாட்டம்நடத்திவரும்ஹூவேநகரில் நெருக்கடி மோசமானதைத் தொடர்ந்து இராணுவச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நகரின் பல பகுதிகளிலும் காவல்செய்வதற்காக அரசாங்க இராணுவ துருப்புக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

### பௌத்த குருவின் நிலை கவலைக்கிடம்

இதற்கிடையில் தென்வியட்னும் அரசாங்கத்தின் நிர்வாகத்தையும் அமெரிக்காவையும் எதிர்த்து உண்ணு விரதமிருந்துவரும் பௌத்த தலைமைக்குருவின் உடல்நிலை இன்று மோசமடைந்ததைத்தொடர்ந்து அவர் ஆஸபத்திரியில் அனுமதிக்கப்பட்டார். உண்ணுவிரதத்தை ஆதரித்து இன்று பௌத்த பிக்குகளும் பெண்களும் ஆண்களுமாக பதினெட்டு பேர் 48 மணி நேர உண்ணுவிரத்தை மேற்கொண்டனர்.

# ஐ. நா. பொதுச்சபை தலைவர் பதவி

## இம்முறை இலங்கைக்கு கிடைக்கலாம்

கொழும்பு, வெள்ளி

செப்டம்பர் மாதம் ஆரம்பமாகவிருக்கும் ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்துக்குப் போகும் இலங்கையின் தூதுகோஷ்டிக்கு யார் தலைமைவகிப்பார் என்பதுபற்றி அரசியல் வட்டாரங்களில் கேள்விகள் எழுப்பப்படுகின்றன

பொதுச்சபைக்கூட்டம் இந்த வருடம் இலங்கைக்கு மிக முக்கியத்துவம்வாய்ந்ததாகவிருக்கும் ஏனென்றுல் இலங்கையின் தூதுகோஷ்டியின் தலைவர் பொதுச்சபை தலைவராகத் தெரிவுசெய்யக்கூடிய சாத்தியமிருந்துவருகின்றது.

இந்த வருடம் தலைமைப் பதவி ஆசிய நாடுகளுக்கே கிடைக்கவிருக்கிறது இந்த குழுவில்ஜப்பான், இலங்கை, மலேசியாஆகிய நாடுகளுக்கு இன்னும் பொதுச்சபையில் தலைமைவகிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இலங்கையின் பிரதிநிதியைப் பொதுச்சபையின்தலைவராக்குவதற்கு முயற்சிகள்நடைபெற்றுவருகின்றன. இந்த வகையில் பாரிஸில் இப்போது தூதராகவிருக்கும் சர் லலிதா ராஜபக்ஷவின் பெயரும் நீதி மந்திரி ஏ.எப். விஜயமானு, பழைய கவர்ஜெனரல் சர் ஒலிவர் குணதிலக ஆகியவர்களின்பெயர்களும்அடிபடுகின்றனகடந்த முறை இலங்கையின் தூதுகோஷ்டிக்கு திரு. ஜி ஜி பொன்னம்பலம் தலைமை வகித்தார்.

சர் லலிதா ராஜபக்ஷவுக்கும், திரு. விஜயமன்னுவுக்கும் அதிக ஆதரவு இருப்பதாகத்தெரிகின்றது. பெரும்பான்மை சமூகத்தையும் மதத்தையும் சார்ந்த ஒருவர் தூதுகோஷ்டிக்கு தலைமைவகித்து அவர் பொதுசபையின் தலைவர் பதவிக்கு தெரிவுசெய்யப்படின், அது இலங்கை மக்களை முறையாக பொதுசபையில் பிரதிநிதித்துவம் செய்வதாக இருக்கும் என்று கருதப்படுகின்றது. அரசாங்கம் இனமதஅடிப்படையில் இந்த விஷயத்லதை அணுகவில்லையென்றும்நாட்டின் பொதுநலனையே கருத்தில்கொண்டிருக்கிறதென்றும் அப்படியில்லையெனில் கடந்தமுறை திரு. பொன்னம்பலத்தை இலங்கை கோஷ்டியின் தலைவராக அனுப்பியிருக்காதென்றும் அரசாங்க வட்டாரங்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றன.

இந்தமுறை மலேசியா தனது உள்நாட்டு விவகாரங்களை உத்தேசித்து தலைமைப்பதவிக்கு போட்டிபோடாது என்றும் ஜப்பானை இலங்கையின் விஷயத்தில் விட்டுக்கொடுக்கசெய்யமுடியும் என்றும் கருதப்படுகின்றது. பர்மாவின் பிரதிநிதியான யுதாண்ட் பொதுக்காரியதரிசியாகவிருப்பதால் அந்த தலைமைப்பதவிக்கு போட்டியிடாது. பாகிஸ்தானும், இந்தியாவும் அந்தப் பதவியை ஏற்கனவே வகித்துள்ளன. எனவே இலங்கைக்கு இம்முறை பொதுசபைத்தலைவர்பதவிகிடைப்பது அனேகமாக நிச்சயம் என்று கருதப்படுகின்றது.

# ஊரெழு கொலை வழக்கில் டாக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி

ஊரெழு கொலைவழக்கு, மல்லாம் மாஜிஸ்திரேட் திரு. ஜி. எப். எச். அத்துறுனு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, காங்கேசன்துறை மாவட்ட வைத்திய உதவி அதிகாரி டாக்டர் வி. சண்முகநாதன் சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் ஊரெழுவைச்சேர்ந்த தம்பிப்பிள்ளை செல்வரத்தினம்கணபதிசின்னத்தம்பியை 66-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ம் தேதி கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. எதிரிசார்பில் அட்வகேட் ரி. கணேசலிங்கம், புறக்டர் வீ செல்லத்துரையின் அனுசரணையுடன் ஆஜரானுர்.

டாக்டர் சண்முகநாதன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

காலஞ்சென்ற சின்னத்தம்பியின் சடலம், மல்லாகம், புன்னுலைக்கட்டுவன் ரோட்டு மத்தியில் கிடந்தது. 66-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 23-ந்தேதி நான் பிரேதபரிசோதனை நடத்தினேன். அவர் ஒரு கறுப்பு பிளாஸ்டிக்'பெல்ட்' அணிந்திருந்தார். நீலநிற உள் கால்சட்டை அணிந்திருந்த அவரின் மார்பில் காயம் காணப்பட்டன. காயம் கிறிஸ்கத்தியினுல் ஏற்பட்டிருக்கலாம்.

வைத்திய உதவி அளிக்கப்பட்டிருந்தால் காலமானவர் பிழைத்திருப்பாரென்றும், வைத்திய உதவி அளிக்கப்படாமலிருந்தால் காலஞ்சென்றவர் ஒருமணிநேரம் உயிருடன் இருந்திருப்பாரென்றும் குறுக்கு விசாரணையின்போது, டாக்டர் கூறினுர்.

புறக்டர் எஸ். நடராசாவின் உதவியுடன், சுன்னுகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு விஜயசூரிய, காங்கேசன்துறை ஏ. எஸ் பி. திரு லியானக்கே ஆகியோர் வழக்கை நடத்தினர்.

[illegible] 20-ந் திகதிவரை ஒத்திப்போடப்பட்டது.

# சேலையின் புதியவிலை ரூ 35

## இன்று முதல் விற்பனை

கொழும்பு, வெள்ளி

எந்தவிதமான உயர்ந்தரக சேலையையும் முப்பத்தைந்து ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யக்கூடாதென்று அரசாங்கம் அறிவித்துள்ளது சேலைக்கும் கட்டுப்பாட்டு விலை விதிகக வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ந்து புதிய நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

நாளை சனிக்கிழமை சேலைகள் எதையும் விற்பனை செய்யக்கூடாதென்றும் ஞாயிற்றுக்கிழமை முதல் இதனை அமுல்செய்ப வேண்டுமென்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது. எந்தரக சேலையினதும்(ஆறுயார்)கூடுதலான விலை 35 ரூபாவாகவிருக்க வேண்டும்.

# கார்கள் இறக்குமதி இல்லை

கொழும்பு, வெள்ளி

எம். பிக் ளுக்கும் அல்லது செனட்டர்கள் ஆகியோருக்கு வெளிநாடுகளிலிருந்து கார் எதுவும் இறக்குமதி செய்யப்படமாட்டாது.

எம். பிக்களுக்கும் செனட்டர்களுக்கும் 600 கார்களை இறக்குமதிசெய்வதென்று அரசாங்கம் முன்னர் முடிவு செய்திருந்தது. ஆனுல் பொதுமக்களினதும் பத்திரிகைகளினதும் பலத்த எதிர்ப்பைத் தொடர்ந்து இந்த முடிவை அரசாங்கம் மாற்றியுள்ளது.

# 4 பேர் பலி

டாக்கா, ஜூன் 10

கிழக்குப் பாகிஸ்தானில் இன்று ஏற்பட்ட ரயில் விபத்தொன்றில் 4 பேர் பலியானுர்கள். 67 பேர் காயமடைந்ததாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

# சாரம், ஷேர்ட், கால்சட்டைகள்: விலைக்கட்டுப்பாடு விதிக்கப்படும்!

## மோசடியைத் தவிர்க்க அரசாங்கம் ஆலோசனை

கொழும்பு, வெள்ளி

சேலைகள், மற்றும் எல்லாவித துணிவகைகளுக்கும் விலைக்கட்டுப்பாடு விதித்திருப்பதுபோல், சாரங்கள், சேர்ட்டுக்கள், கால்சட்டைகள் ஆகியவற்றையும் விலைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதுபற்றி அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்துவருகின்றது.

துணிகளுக்கு விலைக்கட்டுப்பாடு விதித்தஉடனேயே துணிகளை வெட்டி (ரெடிமேட்) உடைகளாக மாற்றிவிட்டனர்என்பதின் காரணமாகவே அரசாங்கம் இப்புதிய திட்டம்பற்றி ஆலோசிப்பதாகத் தெரிகின்றது. சில வர்த்தகர்கள் துணிகளை வெட்டிவைத்துக் கொண்டு விற்க மறுப்பதாகவு தெரிகின்றது.

விலை கட்டுப்பாட்டுத் திட்டம் அமுலுக்கு வரப்பட்டதின் காரணமாக அரசாங்கதின் மீது பழிவாங்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அரசாங்கத்துக்கு இழுக்கு ஏற்படுத்தாமல் இயன்ற எல்லாவற்றையும் செய்வதில் சில வர்த்தகர்கள் ஈடுபட்டிருப்பதாக பதில் வர்த்தக மந்திரி திரு. எஸ். ஏ. பீரிஸ் இன்று 'ஈழநாடு' நிருபரிடம் கூறினர்.

சிலர்துணிகளில் ஒட்டைப் போட்டு வைக்கிருர்கள், சிலர் துணிகளைத் திராவகம் ஊற்றி வைக்கிருர்கள், மற்றும் சிலர், துணிகளின் தடுவிக்கப்பட்ட நாடுகளின் அடையாளங்களை வெட்டிவிடுகிருர்கள். இப்படிச் செய்வதன் மூலம் துணிகளை பாவனைக்கு உதவாதவையாக ஆக்கவும் விலைக்கட்டுப்பாட்டுக்குள் வராத துணிகளின் இலங்கை ஜவுளி என்று விற்கவுமே இதைச் செய்கிருர்கள் என்று அவர் கூறினுர்.

### பாக்தாத்தில் பீரிஸ்


பாக்தாத், ஜூன் 10

பாக்தாத் வந்து சேர்ந்துள்ள இலங்கை வர்த்தக மந்திரி டாக்டர் எம். வி. பி. பீரிஸ் இன்று ஈராக் பொருளாதார மந்திரி அப்துல் ஹிலாலியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினுர்.

### இறக்குமதி

கொழும்பு, வெள்ளி

உப-உணவுப் பொருட்களை இலங்கை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யும் என நிதிஅமைச்சர் திரு. யூ. பி. வன்னிநாயகா தெரிவித்துள்ளார்.



# ஆசிரியருக்கு கடிதங்கள்

## பரிபூரண பல்கலைக் கழகம் வேண்டும்

பல்கலைக்கழகம் என்னும் பதங்கள் பலகலைகட்கு உரிய ஒரு தாபனம் என்றே பொருள் தருகின்றன. அதைவிட்டு இந்துக் கலாச்சாரத்தை வளர்க்க அமைக்கப்படும் பீடமோ, தமிழ்க் கலைகளைக் கட்டி எழுப்பதற்காக இருக்கும் தாபனமோ பல்கலைக்கழக மாகாது

பல்கலைக் கழகம் தமிழர்க்கென அமைக்கும் போது, தமிழ்நாட்டில் அமைக்கும் போது அதன் போதனுமொழி சிங்களமாகவா அமைந்துவிடும்? 'இந்துசமயக் கலாச்சாரத்துக்கு முக்கிய இடம் அளிக்கப்படும்'என்னும் ஒரு விதியை அமைத்துவிடின் இந்துதர்மச் சொத்துக்களை பல்கலைக்கழகச் சொத்தாக்குவதில் இடையூறு இருக்காதே.

எல்லாவற்றுக்கும் மேலாக கிழக்கு மாகாணத்திலேதான் அமைக்கப்பட வேண்டும் என்ற முடிவு 'கத்திகிடக்கும் இடந்தேடி மரையைக் காவியவர்களின் செய்கையை ஒத்ததாகும். தமிழ் மக்களில் கூடிய தொகையினரும் வடக்கு மாகாணத்தில் தான் இருக்கின்றுர்கள்.

எனவே தமிழ் மக்களுக்கென ஒரு பரிபூரண பல்கலைக் கழகம் வேண்டும்.

அது இலங்கையின் இரண்டாவது தலைநகர் எனவும் தமிழ் மக்களின் தனிப்பட்டினம் எனவும் புகழ்பெற்று விளங்கும் யாழ்ப்பாணத்தில் அமையவேண்டும் பல்கலைக்கழகத்துக்கு உபவேந்தராக தெரிவுசெய்யப்படுபவர் இந்து சமயத்தவராக இருக்க வேண்டும். இந்து சமயக் கலாச்சாரத்துக்கு முக்கிய இடம் அளிக்கப்பட வேண்டும். தமிழ்மொழியே போதனு மொழியாக அமைவதுடன், ஏனையமொழிகளும் பயில்வதற்கு வாய்ப்பளிக்கப்படல் வேண்டும். அத்துடன் பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் தமிழ்ப் பிரிவு தொடர்ந்து இருக்க வேண்டும்.

க. பரமசாமி,

நெடுந்தீவு.

## ஒற்றுமைப்பட முடியாதா?

தமிழ்ப்பெருங்குடி மக்களின் தலைவர்கள் தமிழ்மக்களின் முன்னேற்ற விஷயங்களில் ஒற்றுமையாக ஏகோபித்த குரலில் கருமமாற்ற இயலாதா? ஒரு அரசாங்கத்தை அமைப்பதற்கு சிங்களத் தலைவர்களுடன் ஒத்துழைத்த எம் தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களின் கோரிக்கைகளைப் பெறுவதற்கு ஒற்றுமையாகக் குரல் எழுப்பமுடியாதா? தமிழ்மக்கள் மத்தியிலுள்ள இருகட்சிகளான தமிழரசும், தமிழ் காங்கிரசும் தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பதன் முன் தங்களுக்குள் கலந்துறவாடி ஒற்றுமையாகக் கருமமாற்ற இயலாதா? தேர்தல் குறிக்கோளின்றி பழையனவற்றைமறந்து இனிமேலாயினும் காரியங்களைப் பார்ப்பார்களாயின் தமிழ்மக்களின் பல கோரிக்கைகளை தேசிய அரசாங்கத்தின்மூலம் சுலபமாக நிறைவேற்றிக்கொள்ளலாம் பல்கலைக்கழக விஷயத்திலும் இருகட்சிகளும் கோருவது வித்தியாசமானதல்ல. பெயர்களில்தான் வித்தியாசம். இருகட்சித் தலைவர்களும் சந்தித்து பரஸ்பர விளக்கத்தின்பின் ஒருவர்க்கொருவர்

(8-ம் பக்கம் பார்க்க)

## 103 வயது மூதாட்டி

ஊர்காவற்றுறை, சனி

ஊர்காவற்றுறை கரம்பனைச் சேர்ந்த நாகநாதன் நாகம்மா என்ற மூதாட்டி தமது நூற்றிமூன்ருவது வயதில் காலமானுர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாறிவரும்- -மலைநாடு

தலைப்பைப் பார்த்ததும் மலைநாட்டிலுள்ள உயர்ந்த மலைகள் எல்லாம் தரைமட்டமாகி, தேயிலை றப்பர்த் தோட்டங்கள் யாவும் வயல் காடுகளாக மாறிவருவதாக எண்ணிவிடாதீர்கள்.

கலை கலாசாரத் துறையிலும், சமூக பொருளாதார அமைப்பிலும், தார்மீகரீதியிலும் மலைநாட்டில் அண்மைக்காலத்தில் விழிப்பும் வியக்கத்தக்க மாற்றங்களும் ஏற்பட்டு வருவதையே இங்கு குறிப்பிடுகிறேன்.

### கலை கலாசாரம்

படிக்காதபாமரமக்களையே பெரும்பான்மையாகக் கொண்டு விளங்கிய மலைநாட்டுத் தமிழர் சமுதாயத்தில் கடந்த கால்நூற்றுண்டுக் காலத்தில் கல்விவளர்ச்சி அபரிமிதமாக இல்லாவிட்டாலும், ஓரளவுக்காவது ஏற்பட்டே இருக்கின்றது.

சமூகத்தின் மரியாதைக்குரியவர்களாகவும், செல்வாக்குக்குரியவர்களாகவும் இருந்த கங்காணி, கணக்குப்பிள்ளை, கண்டக்டர் போன்ற உத்தியோகங்களில் இருந்த மலைநாட்டவர்கள் தம் பிள்ளைகளை ஓரளவுக்கேனும் படிப்பித்துத் தோட்டங்களிலேயே உயர்ந்த பதவிகள் வகிக்கவும், வேறு உத்தியோகம் பார்க்கவும் ஏற்பாடுகள் செய்துகொண்டனர். ஓரளவுக்கு மேற் கல்வி பயின்றவர்கள் தம் சமுதாயத்தின் நிலையையே மறந்து நகரப்புறங்களுக்குச் சென்று தம் சொந்த வசதிகளை உயர்த்திக்கொள்வதிலும், பிற சமூகங்களுடன் கலந்து தம்மை வேறு இலத்தவர்கள்போல் காட்டிக்கொள்வதிலும் ஈடுபட முற்பட்டனர். ஆனால் ஏழைத்தொழிலாளியின் பிள்ளைகள் கல்வி வசதியின்றிப் பரம்பரைத் தொழிலாளியாகவே இருக்கவேண்டியநிலை ஏற்பட்டுவிட்டது பெரும் கஷ்டங்களுக்கு கிடையில் ஒருசிலர் படித்தாலும் சமூகத்தின் மேல்நிலையில் இருந்தவர்களின் செல்வாக்குடன் போட்டிபோட்டுக்கொண்டு முன்னேற அவர்களால் முடியவில்லை. ஏதோ ஒருவகையில் இன உணர்ச்சி மேலிட்டநிலையில் ஆர்வத்தோடு தம் முயற்சியால் கற்று அறிவுபெற்றவர்கள்தான் தொழிற்சங்கவாதிகளாகவும் மற்றும் எழுத்து, ஆசிரியத்தொழில்களிலும் இறங்கிச் சேவை செய்ய முற்பட்டனர். அவர்களிலும் தொழிற்சங்க இயக்கங்களில் இறங்கிய அனேகர் முதலில் சேவா உணர்ச்சியுடன் இறங்கினாலும் காலப்போக்கில் தம் சமூகத்தையே ஏய்த்துப் பிழைக்கும் தற்குறிகளாகவும் மாறக்கூடியவர்களாகிவிட்டனர். எப்படியும் மலைநாட்டுச் சமுதாயத்தின் அடித்தளத்திலிருந்து எழுந்த ஒரு சேவையாளனையும் அங்கு உயர்ந்தநிலையில் காணமுடிவதில்லை. அதற்குக் காரணம் மலைநாட்டுச் சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சினையான சீர்கேட்டைச் சரிசெய்து அவர்களை மேலே தூக்கிவிடக்கூடிய எந்த விதத் திட்டமும் அவர்கள் மத்தியில் செயல்படுத்தப்படவில்லை என்பதும், அவர்களின் உழைப்பைச் சுரண்டும் தோட்டச் சொந்தக்காரர்களை நீதிநியாயத்தை உணர்ந்து நேர்மையுடன் நடக்கும்படி செய்யக்கூடிய வலிமை அவர்களுக்கு இல்லாதிருப்பதும் மட்டுமல்ல. அடித்தளத்திலிருந்து எழும் உயர்ந்த நோக்கம் படைத்த எவரும் அந்தச் சமுதாயத்தைச் சுற்றி எழுப்பப்பட்டுள்ள முட்சுவர்கள் போன்ற தொழிற்சங்கம் மற்றும் அதிகார வர்க்கத்தினரின் கெடுபிடிகளைத் தகர்த்து முன்னேற இயலுவதில்லை.

இந்த இடைஞ்சல்கள் எல்லாம் எவ்வாறு இருப்பினும் காலத்தின் இயற்கையான மாற்றத்துக்கு ஏற்றுற்போல் அங்கு விழிப்பும் வளர்ச்சியும் ஏற்பட்டே வருகின்றன. இந்த விழிப்பின் தன்மையை உணர்ந்துகொண்டதால் அவர்களைச் சுற்றிப் போடப்பட்டிருந்த வேலிகளும் தாமாகவே விலக்கப்படுகின்றன. இதன் காரணமாக எதிர்காலத்தில் மலைநாட்டில் எழுச்சிமிகுந்த ஒரு தமிழர் சமுதாயம் உருவாகப்போகிறது என்பதை அறுதியிட்டுச் சொல்லலாம்.

மனிதவாழ்வில்

# எண்கள் புரியும் "சர்க்கஸ்"

—2—

பிறப்பு எண்களில் விளையவேண்டிய விதியை ஏதோவொரு சக்தி நுட்பமான முறையில் ஓரளவுக்கேனும் மாற்றிவிடுகின்றதென்பது பற்றியும் அந்தச் சக்தி இரண்டுவிதத்தில் செயல்படுகிறதென்றும் முன்பு கூறினோம். இனி இந்த இரண்டு அம்சங்களில் ஒன்றான சாதக பாதக திகதி எண்கள் பற்றிச் சற்று கவனிப்போம்.

### சாதகமான எண்கள்

குறிப்பிட்ட ஒரு மனிதர் குறிப்பிட்ட தினங்களில் (அதுசாதகமானதாகவோ அன்றி பாதகமானதாகவோ இருக்கலாம்) தம் காரியங்களைச் செய்ததின் மூலம் காரிய சித்தியை அல்லது தோல்வியை அடைகிருர். அவர் தம் காரியத்தை மேற்கொள்ளும்தினத்தின்எண் அவருக்கு சாதகமானதாக இருப்பின் அக் காரியத்தின் மூலம் அனுகூலமான விளைவுகள் ஏற்படுவதாகவும், அல்லது பெருந்தீமை விளையக்கூடியநிலை மாறி குறைவான அளவில் நிகழ்வதாகவும்அமையும். இதையே தலைபோகும் இடத்தில் தலைப்பாகையோடு சமாளிக்கலாமென்று குடுப்பிட்டோம்.

### பாதகமான எண்கள்

சாதகமற்ற எண்ணையுடைய தினத்தில் காரியம் மேற்கொள்ளப்படுமாயின் காரியம் தோல்வியுறுவதையும் வெற்றிகிட்டினும் நீடிக்காது போவதையும் அறியலாம்.

### பிறந்த திகதி

பிறக்கும் திகதியைக் கொண்டு ஒன்றிலிருந்து 9 வரையில்உள்ள எண்களின் கீழ் மனிதர்கள் பிரித்துக் கணிக்கப்படுகின்றனர்ஒவ்வொருஎண்ணுக்கும்... தனியே சாதகபாதகமான

(7-ம் பக்கம் பார்க்க)

# பொன் வயல்

## தொழிலாளி புலம்பல்

— எஸ். எச். ரபீ —

எஸ்டேட்டில் ரப்பர் வெட்டி பொழச்சேன் —நான்
எவ்ளேவோ பணத்தை மிச்சம் பிடிச்சேன்
கஷ்வத்தைக் கண்டறிஞ்ச தில்லை — நான்
கண்டபடி அலஞ்சு திரிய வில்லை.

எஸ்டேட்டில் கள்ளு தண்ணி விக்கிருன் —அதுலே
என்னைப்போல பயலகளெல்லாம் சொக்கிருன்
கஷ்டப்பட்டுச் சேர்த்த பொருளை விக்கிருன்—
என்னைப்போல்
காசை எல்லாம் தொலச்சிப்பிட்டு நிக்கிருன்!

எஸ்டேட்டில் கள்ளுதண்ணி ஒழியணும்—எல்லா
ஏழையிங்க வாழ்வு நன்ருய்த்தழைக்கணும்
கஷ்டமே இல்லாமே வாழணும் — இதற்கு
கவருமண்டு நல்லவழி பார்க்கணும்.

# என்னே நின் அற்புதம்!

பத்து ஆரால் என்பது மலேஸியாவிலுள்ள ஒரு குக்கிராமம். அங்கே ஒரு நீர்க் குட்டை. அதற்குப் பெயர்ஈயக் குட்டை ஒரு தினம் இந்தியர் ஒருவர் அங்கே குளிக்கச்சென்ருர். திடீரென ஒரு அற்புதம் நிகழ்ந்தது. அவர் குளித்தஇடத்துக்கு சற்றுத் தொலைவில் ஏதோ ஒரு பொருள் நீருக்குமேலே எழுந்தது அவர் பயந்து தான்போனார். ஊரில் கதைபரவியது. மக்கள் தினசரி அங்குகூடி அந்த உருவம் குறிப்பிட்ட நேரத்தில் நீருக்குமேல் வந்து தரிசனம் கொடுத்துவிட்டு மறைந்துவிடுவதைக் கவனித்தார்கள், அப்பகுதியிலுள்ள சீனர்கள் அது பேயின் உருவம் என்று நினைத்தார்கள். ஒருதினம் அதைச் சுட்டுத் தள்ளுவதென்றுஅவர்கள் துப்பாக்கிகள் சகிதம்போனுர்கள். ஆனல்அன்றுமட்டும்அந்த உருவம்காணப்படவில்லை. மறுதினம் வழக்கம்போல் அந்த உருவம் தென்பட்டது. நுணுக்கமாகக் கவனித்தபோதுதான்அதுஒரு சிவலிங்கம் என்பதுதெரிய வந்தது. இப்பொழுது தினசரி மக்கள் அங்கு கூடி அந்த சிவலிங்கத்தைத்தரிசிக்கிருர்கள். பூஜைகளும் தவருமல் நடக்கின்றது.

அடியார்களை ஆட்கொள்ள ஆண்டவன் எம் மாதிரியெல்லாம் அற்புதங்களைப்புரிகிருன்!

# 'குஞ்சி அப்பு'வின் குமுறல்

"அந்தக் காலத்தில தொடக்கம் எங்கட சாதி பண்பாட்டில் சிறந்துவிளங்கினது உங்களுக்கு நான் சொல்லியேதெரியவேணும்! ஆனல்இப்பகண்டியலோ எங்கட பண்பாடெல்லாம் காற்றில் கொடிகட்டிப்பறக்குது. சத்தியமாச் சொல்கிறன் ஒரு காற்று அதுவும் இந்த கொன்றல் காட்டு, அப்படியே சுலற்றி ஒரு அடி அடிக்கவேணும். தெருவால போற பொடியன் அத்தனையின்ட கண்களும்...!

இப்ப முழங்காலுக்குமேல சட்டை போடுறதெல்லே நாகரிகமாம்! இங்கிலாந்திலயோ பிரான்ஸ்ஸிலயோ ஒன்றைச்செய்திட்டால் அது இந்த டிங்கிக் காய்ச்சல் பரவின மாதிரி எல்லா இடமும் பரவிவிடுகிறது. என்றாலும் எங்கட இலங்கையருக்கும் மூளையில களிமண்ணே கிடக்குது!

இப்பதான், ஒருவிடயம் ஞாபகத்திற்கு வருகுது. அதாவது கொஞ்சக்காலத்திற்கு முந்தி ஒரு கல்லூரி அதிபர், அந்த பள்ளியில படிக்கிற பெண்பிள்ளைகள் எல்லாம் பாவாடை போட வேண்டும் என்று ஒரு சட்டம் கொண்டுவந்தார். முடிஞ்சுது அலுவல். எல்லாம் வாத்தியோட சண்டைக்கெல்லபோயிட்டினம். பாவாடைகட்டிறது பட்டிக்காட்டுப்பழக்கமாம். கொஞ்சக்காலத்தில சவுண் போடிறதே பட்டிக்காட்டுப் பழக்கமாகப் போய்விடும்போல இருக்குது!

'குஞ்சி அப்பு'

## அடிப்படை நோக்கம்!

க. சுதர்ஸன்
(கரவெட்டி)

குளத்திலே வாழும் மீனானது குளத்திலே இருக்கும் அசுத்தங்களைத் தனக்கு உணவாகக் கொள்வதனல் தடாகம் சுத்தமடைகிறது. வாழைமரம் தனது இனம் பெருகுவதற்குக் குட்டி போடுகிறது. பழம் தராவிடின் அதனை யார் கவனிப்பார்கள். எனவே தன்னினம் மேலும் விருத்தியடைய வேண்டுமென்ற சுயநலத்துடன்தான் அது எமக்கு உணவாகப் பழத்தைத் தந்து தன்னைப் பராமரிக்கச் செய்துகொள்கின்றது.

ஒரு நண்பன் எனக்கு உதவி செய்கிருனென்ருல் அதனர்த்தம் அவன் ஏதோ ஒரு உதவியை என்னிடமிருந்து பெறமுயல்கிருன் என்பதாகும். உலகத்திலே பொதுநலம் செய்கிறேன் என்று ஒருவன் கூறினல், ஏதோ ஒரு சுயநலம் அவனிடம் உள்ளதென்பதை நாம் நன்குணரலாம். தான் செய்த உதவிக்குப் பிரதி உதவி பெறவிரும்பாதவன் எவனே அவன்தான் பொது நலவாதி. தான் சுயநலமாக அடைய எதையும் விரும்பிக்கொண்டு பொதுநலம் செய்கிறேன் எனக் கூறுவது மிகப் பொருத்தமற்ற ஒன்ருகும். எனவே பொதுநலமென்பது சுயநலத்தின் அடிப்படை நோக்கமாகும். ஏதோ ஒரு சுயநலத்தை நாடித்தான் எவரும் பொதுநலவாதியாகிருர்கள்.

## நாடும் நாமும்

★ ஜவுளிக் கட்டுப்பாடு
★ முலாம் பூசுதல்
★ ஏது வானவெளி
★ வீடுகளில் விவசாயம்

ஆகிய அம்சங்களைத் தாங்கிவரும்.

"நாடும் நாமும்"

பகுதியை வாசிக்கத் தவருதீர்கள்.

## சந்திரனில் யாருக்கு இடம்?

பேரு

ஈசன் உறையும் இடமான கைலயங்கிரியின் உச்சியை மலையேறும் வீரர்கள் சென்றடைந்தபோது அவர்களுக்கு வெற்றிதான் ஏற்பட்டது. ஆண்டவனுக்குக் கோபம் வரவில்லை. துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு தன்னை வந்தடைபவர்கள் மீது அவனுக்கு ஏன் கோபம் வரப்போகிறது?

ஆனல் தன் உறைவிடத்தையே மாற்றிவிட அதாவது கைலயங்கிரியையே தன் ராஜ்யத்துக்கு கொண்டு வந்துவிட முயன்ற இராவணன்மீதுதான் அவனுக்குக் கோபம் வந்தது. ஆனல் இராவணன் பட்டபாட்டை நாமறிவோம். எம்பெருமானின் சிகையை அலங்கரிப்பது சந்திரன். அந்தச் சந்திரனைச் சென்றடைய விஞ்ஞான உலகம் முயல்கின்றது. தன்னை வந்தடைபவர்களை அவன் வெறுத்து ஒதுக்குவதில்லை. அதனல் விஞ்ஞானிகளுக்கு வெற்றியேகிட்டும்.

ஆண்டவனை நாம் தான் தேடி அடையவேண்டும். அவனைப் பலவந்தமாக நம்மிடம் வரச்செய்யலாகாது.

ஆண்டவனின் பாதங்களில் கிடக்கும்போதே இத்தனை அக்கிரமங்களைப் புரியும் அற்ப மனிதன் அவன் சிகையில் அலங்கரிக்கும் சந்திரனை அடைந்தபின் எப்படி இருப்பானே? எனவே எல்லா மனிதர்களும் அங்கு சென்றடைவது துர்லபம். உயர்ந்த மனம் கொண்ட உத்தமர்களுக்கு மட்டும்தான் அங்கு இடம் கிடைக்கும்!

## ஹிட்லர் கௌரவப் பிரஜை

ஹிட்லர் ஆட்சி ஒழிக்கப்பட்டு, அவர் பெயரும் ஒழிந்துவிட்டது என்று தானே நினைத்துக்கொண்டிருக்கிருேம்! ஆனல் இன்னும் இருக்கிருர்! அதுவும் கௌரவப் பிரஜையாக!

ஜெர்மனியில் உள்ள 26 நகரங்களின் தஸ்தாவேஜுகளில் இன்னும் ஹிட்லர் பெயர் அப்படியே இருக்கின்றது. அவர் கௌரவப் பிரஜை என்ற குறிப்பும் இருக்கிறது. டாக்டர் ஸ்பீல்மன் என்பவர் எழுதிய ஒரு நூலில் இந்தத் தகவல் காணப்படுகின்றது.

### வணக்கம் வாசகர்களே!

'பொன் வயல்' அம்சத்தைப் பாராட்டி பலர் எழுதியிருக்கிருர்கள்,

-நன்றி.

கட்டுரை, கவிதைகளும் நிறைய வந்து கிடைத்துள்ளன. வசதிபோல் தகுதியானவைகள் பிரசுரிக்கப்படும்.

தொடர்ந்து எழுதுங்கள். உங்கள் கருத்துகளையும் தெரிவியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிகளுக் கிடையேயான 2 ம் பிரிவு கிரிக்கெட் சுற்றுப்போட்டி: யாழ். மத்தியகல்லூரி சாம்பியனானது

## இரண்டு ஆட்டங்களிலும் நல்லநாதன் (40 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு) 10 விக்கட்டுகள் வீழ்த்தினர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மாவட்ட கல்லூரி விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவந்த 2-ம் பிரிவுக்கிடையேயான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் கடந்த 8-ம், 9-ம் திகதிகளில் நடைபெற்ற இறுதிச் சாம்பியன் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சாம்பியனானது.

யாழ். மத்திய கல்லூரிக்கும் யாழ். இந்துக்கல்லூரிக்குமிடையே நடைபெற்ற இறுதிப் போட்டிகளில் இரு ஆட்டங்களிலும். கடைசி யாட்டம் முற்றாக முடிவுறாதபோதும் முதல் ஆட்ட புள்ளி விபரத்தின்படி யாழ். மத்தியகல்லூரி சாம்பியனானதாக அறிவிக்கப்பட்டது.

முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ் மத்திய கல்லூரி சகல விக்கட்டுகளையும் இழந்து 161 ஓட்டங்கள் எடுத்தது. யாழ். இந்து தனது முதல் இனிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து 71 ஓட்டங்கள் எடுத்தது. 3-ம் இனிங்ஸில் யாழ். மத்திய கல்லூரி 6 விக்கட்டுகளை இழந்து 136 ஓட்டங்களையும், யாழ். இந்துக் கல்லூரி 7 விக்கட்டுகளை இழந்து 150 ஓட்டங்களையும் பெற்றது.

### ஸ்கோர் விபரம்

முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி வீரர்களில் ஸ்ரீ குகேந்திரன் 13 ஓட்டங்களும், வி. நல்லநாதன் 49 ஓட்டங்களும், எஸ். சாந்திகரன் 20 ஓட்டங்களும், எஸ். பாலேந்திரா 30 ஓட்டங்களும், வீ. ரங்கநாதன் 5 ஓட்டங்களும் ஆர். இராசசிங்கம் 11 ஓட்டங்களும், வி. குருநாதன் 5 ஓட்டங்களும் முறையே பெற்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் யாழ். இந்து பந்தெறி வீரர்களான ரி கந்தசாமி 43 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கட்டுகளையும், கே. ஜெயபாலசிங்கம் 36 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 3 விக்கட்டுகளையும், வி. சின்னராசா ஓட்டங்கள் 39 நஷ்டத்துக்கு 4 விக்கட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து விளையாடிய யாழ். இந்துக் கல்லூரி தனது 1-வது இனிங்ஸில் கே. அமலசிலன் 7 ஓட்டங்களும், வி சின்னராசா 12 ஓட்டங்களும், கே ஜெபாலசிங்கம் 13 ஓட்டங்களும், என் சற்குணசிலன் விக்கட்டை இழக்காமல் 6 ஓட்டங்களும் முறையே பெற்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் யாழ் மத்திய கல்லூரியின் பந்தெறி வீரர்களான நல்லநாதன் 14 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 4 விக்கட்டுகளையும், பி யோகேஸ்வரன் 6 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கட்டுகளையும், சாந்திகான் 24 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கட்டுகளையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இனிங்ஸில் மத்திய கல்லூரியின் துடுப்படி வீரர்களான நல்லநாதன் 13 ஓட்டங்களும், சுந்தரலிங்கம 21 ஓட்டங்களும், சாந்திகரன் 57 ஓட்டங்களும், பாலேந்திரா 23 ஓட்டங்களும், ஸ்ரீ குகேந்திரன் 7 ஓட்டங்களும், யோகேஸ்வரன் 8 ஓட்டங்களும் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் யாழ் இந்துவின் பந்தெறி வீரரான கந்தசாமி 41 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 4 விக்கட்டுகளை வீழ்த்தினர்.

யாழ் இந்துக்கல்லூரியின் 2-வது இனிங்ஸில் சிறந்த துடுப்படி வீரர்களான உதயலிங்கம் 15 ஓட்டங்களும், அமலகுகன் 38 ஓட்டங்களும், சின்னராசா 42 ஓட்டங்களும், ஜெயபால சிங்கம் 20 ஓட்டங்களும், குணசிலன் 9 ஓட்டங்களும் பெற்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் யாழ் மத்திய கல்லூரியின் பந்தெறிவீரர்களான நல்லநாதன் 28 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 6 விக்கட்டுகளையும், குருநாதன் 16 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கட்டுகளையும் முறையே வீழ்த்தினர்.

தொடர்ந்து இரு நாட்கள் நடைபெற்ற போட்டியில் யாழ் இந்துக்கல்லூரி ஆரம்பத்தில் விட்டுக்கொடுத்த போதும் இறுதிக்கட்டத்தில் மிகவும் உற்சாகமாக விளையாடியது பாராட்டத்தக்கது. இப்போட்டி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.




## கொழும்பு

ஞாயிறு 12 - 6 - 66

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 பக்திப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 திரை இசை

இரவு 6-15 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 வீணை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பாட்டு — பஜனேஸ்வரி தில்லைநாதன், 10-00 மகளிர் விரும்பியவை — இசைத்தட்டுகள்.

## சென்னை

(காலை 7-15, பகல் 11-55, பகல் 2-00, மாலை 6-05, இரவு 9-00)

**416.7 மீற்றர் (720 கிஸை)**

காலை 6-00 வந்தேமாதரம்—மங்களஇசை, 6-05 பாட்டு, 6-45 துதிப் பாடல்கள், 6-55 அருள் வாக்கு, 7-00 இசைமலர், 7-30 ''ஒளிமிகுபாரதம்'', 7-30 திரைகானம், 8-15 வைரமங்கலம், 9-15 சித்திர அரங்கம், 9-30 சங்கீத உபந்நியாசம், 10-30 மதுரகீதம்

பகல் 12-00 கீர்த்தனைக் கோவை, 12-30 சூரிய காந்தி, 1-00 பாட்டு, 1-40 திரைகானம், 2-10 பாப்பா மலர், 3-00 திரைகானம், 3-30 ''மோட்டார் சுந்தரம்பிள்ளை'' — ஒலிச்சித்திரம்.

மாலை 4-30 பாட்டு, 5-30 வீணை.

இரவு 6-20 திரைகானம், 6-40 நாட்டுநடப்பு, 6-45 உரைசித்திரம், 7-00 மதுரகீதம், 7-30 விவசாயிகள் நிகழ்ச்சி, 8-00 வீணை. 8-30 நேயர்விருப்பம், 9-15 செய்தி அரங்கம், 9-30 இலக்கிய உபந்நியாசம், 10-30 திரைகானம், 11-00 சூலமங்சலம் சகோதரிகள் — பாட்டு (இசைத்தட்டு).

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 11-55, பகல் 2-00, மாலை 6-05, இரவு 7-15.)

**319.1 மீற்றர் (940 கிஸை)**

காலை 6-30 வந்தேமாதரம், 6-50 மெல்லிசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 மதுரை மணிஐயர், டி. எம். சௌந்தரராஜன் — பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி, 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-16 பெண்ணுலகம், 2-45 மெல்லிசை, 3-00 அறுபடை வீடு — இசைச்சித்திரம்.

மாலை 4-30 பாட்டு, 5-30 வாத்தியஇசை, 5-40 சிறுவர் அரங்கம்.

இரவு 6-20 இசை மஞ்சரி, 6-40 வல்லுப்பாட்டு, 7-00 பொதுமேடை, 7-15 தமிழில் செய்தி, 7-30 விவசாயிகள் நிகழ்ச்சி, 8-00 விவாதம், 8-25 இடைவேளை, 8-30 இசைமாலை.

## ரேஞ்செஸ் வெற்றி

ஊர்காவற்றுறை, சனி

அண்மையில் நடைபெற்ற தீவுப்பகுதி கரபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் தீவுப்பகுதி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட தம்பாட்டி கோஷ்டியினரை ஊர்காவற்றுறைரேஞ்செஸ் கோஷ்டியினர் தோற்கடித்தனர்.

நடைபெற்ற மூன்று ஆட்டங்களிலும் இரு ஆட்டங்களில் ரேஞ்செஸ் கோஷ்டியினர் வெற்றியீட்டினர்.

## புழக்கத்தில் போலி நாணயங்கள்

கொழும்பு, சனி

ஐம்பது சத பழைய பித்தளை நாணயங்களைப்போன்ற தோற்றமுள்ள போலி நாணயங்கள் பெருமளவில் புழக்கத்தில் இருப்பதாகத் தெரிகிறது. அரசாங்க கூட்டு நிறுவனங்களும் தனியார் துறை நிறுவனங்களும் இப்போலி நாணயங்களினால் பெருமளவு நஷ்டமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வங்கியில் பணம் போடுவதற்கு எடுத்துச்செல்லப்படும் சில்லறை நாணயங்கள் போலியானதெனக் காணப்படின் வங்கி அதிகாரிகளினால் அவை பறிமுதல்செய்யப்படலாம்.

## எண்கள் புரியும் . . .

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

தினங்கள் குறிக்கப்படுகின்றன. உதாரணமாக, எண் 1 ஐ எடுத்துக்கொள்வோம். 1,10,19,28 ஆகிய திகதிகளில் பிறப்பவர்கள் அனைவரும் 1 எண்ணின் ஆட்சிக்குட்பட்டவர்களே இந்த எண்ணின் பொதுவானதன்மைஎன்னவென்றால், தன்னால் ஆளப்படுபவரை, முற்கோபியாகவும், காதலில் விருப்பம் உள்ளவராகவும், அரசியல் அரசாங்கத்துறைகளில் வெற்றி பெறுபவராகவும் கன்னியாதிகளில் விரைவில் பீடிக்கப்படக்கூடியவராகவும் ஆக்குவதாகும். இந்தத் தன்மைகள்பெயர் எண்ணைப் பொறுத்தும், சாதகபாதகமான திகதிகளைப் பயன்படுத்துவதைப் பொறுத்தும் கூடவோ குறையவோ செய்யலாம் இந்த எண்ணுக்கு 1, 10, 19,28 ஆகிய திகதிகள் பாதகமான சாதகமான் (வெற்றிதரும்) திகதிகள் என்றும், 8,17,26, ஆகிய திகதிகள் (துரதிருஷ்ட) திகதிகள் என்றும் கருதப்படுகின்றன. இதுபோலவே 2 எண்ணுகிய 2,11,20,29-ம்திகதிகளில் பிறப்பவர்களுக்கும் வேறு பலன்களும் சாதகபாதகமான திகதிகளும் உண்டு. இவைபற்றி இங்கு விரிவாக விளக்கின் நீண்டுவிடும். எண்கலையின்படி ஒருவர்தமக்குச்சாதகமான திகதிகளைப் பயன்படுத்தினால் காரியவெற்றியையும் பாதகமான திகதியைப் பயன்படுத்தினால் துரதிருஷ்டத்தையும் அடைகிறார் என்பதை வாசகர்கள் அறிந்துகொண்டால் போதுமானது. இனி அடுத்த அம்சத்துக்கு வருவோம்.

[பெயர் எண்களைப் பற்றிய குறிப்பு அடுத்தவாரம் வெளிவரும்]

### நெடுந்தீவிற்கு

## தந்தியைத்தவிர வேறுதொடர்பு இல்லை: 3 வள்ளங்களும் பழுதாகின

### பிரயாணம் செய்யவேறு வசதியில்லை

ஊர்காவற்றுறை, சனி

நெடுந்தீவுக்கும் ஊர்காவற்றுறைக்குமிடையே சேவையில் ஈடுபட்டிருந்த மோட்டார் வள்ளங்கள் 'இராஜேஸ்வரி', சில்வஸ்பிறே', 'எலாரு' ஆகியமூன்றுமே பழுதடைந்து விட்டன. நெடுந்தீவுப்பிரயாணங்கள் யாவும் முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளன; அவசரமாகப் பிரயாணம் செய்ய வேண்டியவர்கள் துறைமுகத்தில் 3 மணிவரை காத்திருந்து ஏமாற்றத்துடன் வீடு திரும்பினார்கள்.

இக்காற்றுக் காலங்களில் நெடுந்தீவுக் கடலைச்சமாளிக்கக்கூடிய இம்மோட்டார் வள்ளங்கள் இராஜேஸ்வரி, சில்வஸ்பிறே, எலாரு ஆகியவை மட்டுமேயாகும். தற்பொழுது நெடுந்தீவு மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமாயின் இம்மோட்டார் வள்ளங்களை அரசாங்கம் நன்னிலையில் முன்கூட்டியே வைத்திருந்தால் இம்மோசமான நிலை ஏற்பட்டிருக்கமுடியாது.

மோட்டார் வள்ளங்கள் தான் தபால்களையும் ஏற்றிச் செல்வனவாகையால் நேற்றில் இருந்து தபால்விநியோகமும்பாதிக்கப்பட்டுள்ளது தந்தியைத்தவிர வேறு எவ்வகையிலும் வெளியூர்களோடு தொடர்புகொள்ள முடியாது மக்கள் பெரும் சஞ்சலப்படுகிறார்கள். அவசர பிரயாணம் செய்பவர்களும், நீதிமன்றங்களுக்கும் அரசாங்க அலுவலகங்களுக்கும் செல்ல வேண்டியவர்களும் பெரும் கவலைக்கும் பரபரப்புக்கும் ஆளாகியுள்ளார்கள். இது ஒரு புறம் இருக்க இங்கு பஸ் சேவையில் ஈடுபட்டிருக்கும் ஒரே ஒரு பஸ் வண்டியும் கடந்த நாலு நாட்களாக பழுதடைந்து கிடைக்கிறது.

## மின்சார வெளிச்சம் கிடைப்பதில் தாமதம்

ஊர்காவற்றுறை, சனி

புங்குடுதீவு அரசினர் ஆஸ்பத்திரிக்கு இதுவரை மின்சார வெளிச்சம் கிடைக்கவில்லை. எல்லா உபகரணங்களும் பூட்டப்பட்ட நிலையில் மின்சார வெளிச்சம் பல மாதங்களாகக் கிடைக்கவில்லை. திருத்துவதற்குரிய உபகரணம் ஒன்று கொழும்பில் இல்லை எனக் கூறப்பட்டுவருகிறது.

ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு அடுத்தபடியாக இருக்கும் இந்த ஆஸ்பத்திரிக்கு அவசியம் மின்சாரவெளிச்சம் தேவை என வைத்திய அதிகாரி மேலிடத்திற்கு மனுச்செய்துள்ளார் எனவும் அறியப்படுகிறது.

## தமிழ்க் கவிதைக் குழுவின் அங்கத்தவர்கள்

கொழும்பு, சனி

ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தின் தற்கால தமிழ்க் கவிதைக் குழுவின் அங்கத்தவர்களாக பின்வருவோரை கல்வி கலாச்சார மந்திரி 1966-ம் ஆண்டு மேமாதம் முதலாம் திகதி தொடக்கம் மூன்று ஆண்டுகளுக்கு நியமித்துள்ளார்

திருவாளர்கள் வி. வி. இராசசுந்தரம் இ. இரத்தினம், ஏ, ஏ சி. லெப்பை, பண்டிதர் எம் இராசையா. திரு. எஸ். நடராசா குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்,


"லேடன்" LEYDEN

தயாரிப்புகள்:-

○ பெனியன்
○ ஸ்போட் சேட்
○ ரி சேட்
● ரெறி சேட்
● ரெமி பிளவுஸ்
● பேபி வெஸ்ட்
● கால்மேஸ் (Nylon & Cotton)

லேடன் காமென்ஸ்

32A, கே கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வரட்சிக்குப் பின் மழை

சொர்ணதோட்டம். சனி

பதுளை மாவட்டத்தில் நிலவி வந்த வரட்சி நேற்றுப் பெய்த கடும் மழையுடன் முடிவடைந்தது.

மழை பெய்ததின் காரணமாக கமக்காரர்கள் சந்தோஷமடைந்துள்ளனர்.

## ஜயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கமின்றி இந்நாடகங்களைப் பார்ப்பின் பின்னர் அப்படி எழுத அவர்கள் மனம் இடம்தராது.

தமிழகத்தில் நாடகக்கலை சினிமா உத்திகளையும் கடைப்பிடித்து எப்படி முன்னேறி வருகிறதென்பதை இந்நாடகம் காட்டியது.

ஃ ஃ ஃ

சினிமாவால் நாடகக்கலை கெட்டுவிட்டதென்று சிலர் கூறுவதுண்டு. ஆனால் அந்த நாடகத்தைப் பார்த்த போது, அக்கருத்து சரியல்லவென்றே தெரிந்தது. மழை பொழியும் காட்சி, வானத்தில் சந்திரன்வருவது, விமானம் பறப்பது எல்லாம் மேடையில் எப்படிக்காட்ட முடிகிறதென்று வியப்பளித்தது.

ாழ்ப்பாண திறந்தவெளி அரங்கிலே இவ்வித "சீன்கள்" காட்டத்தக்க வசதிகள் இல்லை என்று பகிரங்கமாகப் புகார் கூறினார் தங்கவேலு. இதை மாநகரசபையினர் கவனித்து, நவீன முறையில் நாடகங்களும் கலைநிகழ்ச்சிகளும்நடத்தும் படியாககூடிய அபிவிருத்திகளைச் செய்தல் வேண்டும்.

தங்கவேலுவுக்கு நன்கு பாடத்தெரியுமென்பதை அன்றுதான் அறிந்தேன். நகைச்சுவையும், நடிப்புத் திறனும், நல்ல குரலும் உள்ள தங்கவேலுவை, தமிழகத்தின் ஒரு கலைப்பொக்கிஷமென்றே கூறவேண்டும். அவரும் அவரது கலைக் கோஷ்டியினரும் நீடூழி வாழ்க! ஃ ஃ

பொருந்தாத செய்கை பொலியக்கண்டேன் போற்றிசைத்து விண்ணோர் புகழக் கண்டேன், பரிந்தார்க்கருளும் பரிசுங்கண்டேன், பரிந்தார்க்கருளும் பாராகிப்புனலாகி நிற்கை கண்டேன், விருந்தாய்ப் பரந்த தொகுதிகண்டேன், மெல்லியலும் விநாயகனுந் தோன்றக்கண்டேன் மருந்தாய்ப்பிணி தீர்க்குமாறு கண்டேன் வாய்மூரடியகனை நான் கண்டவாறே.

—அப்பர் சுவாமிகள்

## ஒற்றுமைப்பட . .

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

விட்டுக்கொடுத்து ஒத்த கோரிக்கையை அரசாங்கத்திடம் சமர்ப்பித்தால் விரைவில் பலன் கிடைக்கலாம்.

ஒரு பொதுவான திட்டத்தின்கீழ் தேசிய அரசாங்கம் அமைக்க சிங்களத் தலைவர்களுடன் எங்கள் தலைவர்கள் ஒத்துழைக்க முடியுமெனின் ஏன், தமிழரின் முன்னேற்றம் கருதி ஒற்றுமைப்பட முடியாது.

ம. சரவணபவன்

மௌசாஎல்ல,
லிண்டுலா.


விளம்பரம்

### நெசவு நூல்
### (ரேயோன்யாண்)

உண்மையாக உபயோகிப்பவர்களுக்கு மாத்திரம் விற்பனைக்கு நெசவு நூல் (ரேயோன்யாண்) உண்டு.
தபால் பெட்டி இல. 1199
கொழும்பு.

491


## கொலை வழக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூர்த்தியின் பாதுகாப்பில் இருந்தது.

நீதியரசர்: இப்பொழுது நிலையத்திற்குப் பொறுப்பானவர் யார்?

சப்இன்ஸ்பெக்டர், விஜயசூரியா. புத்தகங்கள் காணாமற்போனதை இன்ஸ்பெக்டர் மூர்த்தி கண்டுபிடித்து அறிவித்தார்.

ஜி.ஜி: இதுசம்பந்தமாக விசாரணை நடைபெற்றதா?

சப்இன்ஸ்பெக்டர்: இது சம்பந்தமாக விசாரணை ஒன்று நடைபெற்று, விசாரணைவிபரங்கள் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அனுப்பப்பட்டது.

நீதியரசர்: இப்புத்தகம் காணவில்லையென்பது எந்த சந்தர்ப்பத்தில் தெரியவந்தது.

சப்இன்ஸ்பெக்டர்: இப்புத்தகம் எனது பாதுகாப்பில் இருக்கவில்லை. புத்தகம் காணவில்லை யென்பதை இன்ஸ்பெக்டர்மூர்த்திதான் தெரிவித்தார்.

நீதியரசர்: இப்புத்தகங்கள் வழக்கமாக எங்கே வைக்கப் படுவது?

சப்-இன்ஸ்பெக்டர்: பூட்டுள்ள அலுமாரியில்

இச்சமயத்தில் கான்ஸ்டபிள் குணரத்தினத்தை கோர்ட்டில் ஆஜராகும்படி நீதியரசர் உத்தரவிட்டார்.

நீதியரசர்: நீர் வைத்திருக்கும் புத்தகத்தில் எவருடைய சாட்சியங்கள் பதியபட்டன?

கான்ஸ்டபிள்; சின்னத்தம்பி பாலசுந்தரம், தில்லையம்பலம் தர்மரத்தினம்ஆகியோரின் சாட்சியங்கள்.

## சுவீப் முடிவுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 162-50, ஆறுதல் பரிசுகள் பெறும் 100 அதிர்ஷ்டசாலிகள்:

| | |
|---|---|
| 12 Z 0686 | 09 U 0331 |
| 10 V 0755 | 06 D 0616 |
| 04 H 0342 | 03 D 0142 |
| 07 R 0097 | 04 B 0811 |
| 10 W 0425 | 12 F 0701 |
| 08 U 0657 | 12 D 0421 |
| 07 Z 0808 | 05 B 0730 |
| 15 J 0081 | 08 G 0213 |
| 13 S 0916 | 06 F 0103 |
| 03 B 0047 | 08 A 0446 |
| 06 L 0987 | 05 A 0643 |
| 02 W 0234 | 02 A 0631 |
| 10 W 0856 | 05 H 0279 |
| 04 X 0722 | 07 Q 0811 |
| 11 X 0253 | 01 Q 0072 |
| 03 G 0435 | 01 C 0349 |
| 11 F 0037 | 08 N 0907 |
| 09 D 0435 | 03 B 0909 |
| 09 J 0160 | 12 H 0974 |
| 09 Q 0110 | 07 X 0390 |
| 03 F 0239 | 13 X 0033 |
| 05 A 0299 | 03 C 0220 |
| 13 A 0350 | 05 F 0126 |
| 08 M 0403 | 12 T 0086 |
| 04 O 0580 | 12 Y 0213 |
| 08 V 0518 | 06 Y 0047 |
| 08 P 0984 | 08 X 0942 |
| 13 B 0450 | 02 Q 0093 |
| 02 W 0001 | 03 H 0952 |
| 04 L 0190 | 03 U 0449 |
| 12 J 0463 | 11 D 0177 |
| 02 J 0476 | 08 D 0663 |
| 05 A 0730 | 06 Y 0385 |
| 11 C 0519 | 07 W 0877 |
| 06 G 0417 | 13 Q 0821 |
| 03 G 0974 | 06 X 0756 |
| 02 T 0788 | 06 F 0160 |
| 12 U 0735 | 12 Y 0104 |
| 07 C 0193 | 10 A 0521 |
| 08 X 0891 | 04 B 0465 |
| 06 V 0669 | 13 H 0383 |
| 02 S 0481 | 05 S 0396 |
| 08 U 0930 | 06 F 0916 |
| 08 U 0938 | 02 B 0367 |
| 13 V 0624 | 11 K 0353 |
| 12 F 0406 | 10 R 0410 |
| 05 L 0959 | 14 U 0072 |
| 10 S 0154 | 05 E 0614 |
| 04 H 0048 | 03 D 0044 |
| 09 Z 0935 | 06 K 0050 |

[இவை உறுதிப்படுத்தப் படவேண்டும்.]

## ஏகமனதாக தலைவர் தெரிவு

ஏழாலை, சனி

ஏழாலை கிராமசபைக்கு அண்மையில் நடைபெற்ற தலைவர் தெரிவின்போது திரு. க. சிவகுரு ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்விசேஷ கூட்டத்திற்கு உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் தலைமை வகித்தார்.

நீதியரசர்; புத்தகம்மறைந்தது சம்பந்தமாக திரும்பவும் புதிய விசாரணை நடத்தப்படவேண்டும் இப்புத்தகமில்லாமல் விசாரணை நடத்த முடியாதென்றும், இதுபற்றி உடனடியாக விசாரணை செய்யவேண்டுமென்றும் விசாரணை அறிக்கை ஜூலை மாதம் 7-ம் திகதிக்கு முன் கோர்ட்டிற்கு அனுப்பவேண்டுமென்றும் நீதியரசர் தெரிவித்தார்.

எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு ஜி ஜி பொன்னம்பலம், அட்வகேட் எம் எஸ் சுந்தரலிங்கத்தின் உதவியுடனும் புறக்ரர் ரி குணரத்தினத்தின் அனுசரணையுடனும் ஆஜரானார்.

விசாரணையை ஜூலை மாதம் 10-ம் தேதி வரை நீதியரசர் ஒத்திவைத்தார்.

## தென்னாபிரிக்க . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் நான் திருப்தி அடைகின்றேன் என்றும் மக்களிடையே ஒரு புதிய நம்பிக்கை உதயமாகியிருக்கிறதென்றும் கூறினார்.

தென்னாபிரிக்காவில் இனவெறிமுற்றி அங்கு நிலைமை மோசமாக விருந்தபோதிலும் தென்னாபிரிக்காவுடனும் மற்றும் நாடுகளுடனும் நடைபெறும் பேச்சு வார்த்தைகள் மூலம் ப்பிரச்னையைத் தீர்க்கமுடியுமென்று தாம் நம்புவதாகவும் செனட்டர் கெனடி கூறினார்.

கடந்த நூறு வருடங்களாக இனவெறிக்கு எதிராக அமெரிக்கா கடுமையாகப் போராடிவந்த போதிலும் தென்னாபிரிக்கா இதற்கு எதிர் மாறாகச் சென்று கொண்டிருக்கிறது என்றும் செனட்டர் ரொபர்ட் கெனடி வருத்தப்பட்டார். (பி. டி. ஸி.)

## மாறுதல்கள்

கொழும்பு, சனி

வர்த்தக அமைச்சின் கீழ் இயங்கிய கூட்டுறவு அபிவிருத்திப்பகுதியும் கூட்டுறவு சங்கங்ளின் ரெஜிஸ்டார் பகுதியும் இனிமேல் விவசாய உணவு, கூட்டுறவு அமைச்சின்கீழ் செயல் படும்.

பிரதம மந்திரியின் வர்த்தமானி அறிவித்தலொன்றில் இந்த விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் தொடர்ந்து வர்த்தக அமைச்சின்கீழ் இயங்கும்.

## சனசமூகநிலைய ஆண்டுவிழா

துணுக்காய், சனி

அண்மையில் இங்கு நடைபெற்ற துணுக்காய் சனசமூகநிலைய ஆண்டுவிழா போட்டியில் வெற்றியீட்டியவர்களின் விபரம் வருமாறு:

6 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி: நீலர் சின்னத்தம்பி, வி. தருமலிங்கம்.

மெதுவான சைக்கிள் ஓட்டப்போட்டி: ஐ. திருநாவுக்கரசு, எஸ். ஜீவகடாச்சம்.

விநோத உடைப்போட்டி: டி. ஏ. ஆனந்தராசா, என். கிருஷ்ணசாமி, பலூன் உடைத்தல்: (ஆண்கள்) க. யோகநாதன், க. கயிலவராசா.

(பெண்கள்) பி, பத்மராணி, ப. கமலேஸ்வரி.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க






எவ்வாறு
# சன்லைட்
மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது பாருங்கள்

வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்

அதற்குக் காரணம், சன்லைட்டில், உங்கள் ஆடைகளை, மேலும் பிரகாசமாக—சலவைக்குச் சலவை பிரகாசமாக—தோன்றச் செய்யும் ஒரு விசேஷ பொருள் சேர்ந்திருப்பதே. சன்லைட்டின் செழுமையான நீடித்த நுரை, முழு அழுக்கையும், விரைவாகவும், இலகுவாகவும் அகற்றுகிறது; அதே வேளையில் அது மென்மையானது, இதமானது. ஒரே ஒரு கட்டி சன்லைட், பலரகமான 50-60 ஆடைகளைக் கழுவுகிறது—ஒரு ஆடைக்குச் செலவு ஒரு சதத்திலும் குறைவு.

மேலும் மேலும் தாய்மார்கள், தங்கள் வீட்டில்—சேலைகள், சேர்ட்டுகள், காற்சட்டைகள், பாவாடைகள், துவாய்கள், படுக்கை விரிப்புகள் போன்ற சகல ஆடையணிகளையும் சலவை செய்ய, சன்லைட் உபயோகிப்பதில் ஆச்சரியமில்லை. தங்கள் சலவை வேலைகளுக்கு சன்லைட்டே சிறந்ததென்பது அவர்களுக்குத் தெரியும்—மிகச் சிறந்ததே அவர்களுக்கு மிகத் தகுந்தது. தங்கள் குடும்பத்தினர். மேலும் பிரகாசமான மேலும் கவர்ச்சியான உடையணிந்து தினமும் காட்சியளிப்பதைக் காண, அவர்கள் விரும்புகிறார்கள். சன்லைட்டை அவர்கள் உபயோகிப்பதற்கும், நீங்கள் உபயோகிக்க வேண்டியதற்கும் காரணம், இதுதான்—ஏனெனில், அது மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது.

ஒரு லீவர் உற்பத்தி

JWT/S/1X54


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 12ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org